Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

# EELA NADU




போன 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம் பிலவ தை 25 ஆம் நாள ரமழான் 1 (7-2-62) புதன்கிழமை இதழ் 309

# மற்ருெரு சிவில் சேவை

# அதிகாரி கைது

## ரயில்வே நிர்வாக மனேஜர் பதவி வகித்தவர்

## சதித்திட்டம் சம்பந்தமாக மொத்தம் 26 பேர் காவலில் உள்ளனர்

கொழும்பு, செவ்வாய்

தோல்வியில் முடிந்த 'திடீர் புரட்சி' சதித் திட்டம் சம்பந்தமாக இன்று மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். நேற்று இருவர் கைது செய்யப்பட்டனர். இதுவரை மொத்தம் 26 பேர் சதித் திட்டம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியில் நிர்வாக அதிபராகக் கடமை ஆற்றிய மேஜர் வி. ஜே. எச். குணசேகரா இன்று கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சிவில் சேவையைச் சேர்ந்த மேஜர் குணசேகரா மட்டக்களப்பு உட்பட மற்றும் பல இடங்களிலும் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர். முன்னுள் பிரதமர் திரு. பண்டாரநாயக்கா நியமித்த பார்லிமெண்டரி லஞ்ச விசாரணைக் கமிஷனின் காரிய தரிசியாகவும் கடமையாற்றிய மேஜர் குணசேகரா, குடியேற்ற வெளியேற்ற இலாகா உதவிக் கட்டுப்பாட்டதிகாரியாகவும், நீர்ப்பாசன இலாகா உதவி டைரக்டராகவும் பணியாற்றியிருக்கிருர்.

ஓய்வு பெற்ற உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்டன் திரு. லயனல் குணதிலகா நேற்று கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். திரு. லயனல் குணதிலகா, பண்டாரநாயக்கா கொலை வழக்கில் ஒரு முக்கிய சாட்சியாக இருந்தார்.

சென்ற மாதம் 26-ந் திகதி கண்டுபிடிக்கப்பட்ட இச்சதித் திட்டம் பற்றித் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

முன்னுள் கடற்படைத் தளபதி ரோய்ஸ் டி' மெல்லைக் கைது செய்வதற்கு உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அவர் கைது செய்யப்படவில்லை. அவர் இன்னமும் தேடப்பட்டு வருகிருர்.

## ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு 5 பாடங்கள் எழுதவேண்டும்

### வித்தியாதிபதி அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

இனிமேல் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஐந்து பாடங்களுக்குக் குறைவாக எடுக்க முடியாது என்று வித்தியாதிபதியின் புதிய உத்தரவு ஒன்று தெரிவிக்கிறது.

இந்த ஐந்து பாடங்களில் ஒரு பாடம் சமய பாடமாக இருக்க வேண்டும் என்று வித்தியாதிபதி பாடசாலை அதிபர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பியுள்ள அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றுவதற்குமுன் ஒரு மாணவன் எந்த எந்தப் பாடங்களை எடுக்கலாமென்பதை உறுதி செய்து கொள்வதற்காக பாடசாலைகளில் தெரிவுப் பரீட்சையொன்று நடைபெற வேண்டுமென்றும் வித்தியாதிபதியின் அறிக்கை கூறுகிறது.

ஒரு தடவைக்கு மேல் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு மாணவர் பாடசாலையில் கற்ற சகல பாடங்களிலும் பரீட்சை எழுதலாம் என்றும் வித்தியாதிபதியின் அறிக்கை தெரிவிக்கிறது.

## நேப்பாளம் மறுப்பு

புதுடில்லி, பெப். 6

பாரத நாட்டைப் பற்றியோ பிரதமர் திரு. நேருவைப் பற்றியோ நேபாளத்தின் பொறுப்பு வாஒந்த எந்த மந்திரியும் குற்றம் சாட்டிப் பேசவில்லை என நேப்பாள அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேப்பாள வெளி விவகார மந்திரி திரு. துளசி கிரி பேசியதாக வெளி வந்த சில கருத்துக்களை ஆட்சேபித்து இந்தியா இரு ஆட்சேபக் குறிப்புக்கள் அனுப்பியிருந்தது. புதுடில்லியிலுள்ள நேப்பாள ஸ்தானிகர் நேற்று இதற்கான பதில்களை இந்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தார்.

பொதுக் கூட்டங்களில், அப்பேச்சுக்கள் தயாரிக்கப்படாது பேசப்பட்டதென்றும் இது சம்பந்தமாக அரசாங்கக் குறிப்புக்கள் எதுவும் வைத்திருக்கவில்லையென்றும் நேப்பாள அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. திரு. நேருவையோ இந்தியாவையோ புண்படுத்தக் கூடிய விதத்தில் பேசியதாகத் தமக்கு ஞாபகமில்லையென்று வெளி விவகார மந்திரி தெரிவித்துள்ளார் என்றும் இந்தியாவுடன் கொண்டுள்ள நட்புறவை வளர்க்கவே தாம விரும்புவதாகவும் நேப்பாள அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## எதிர்த்துத் தாக்கும் சக்தி

### அமெரிக்காவுக்கு இருக்கிறதாம்

வாஷிங்டன், பெப் 6

அமெரிக்கா மீது திடீரென அணு ஆயுதத் தாக்குதல் பெற்ருல் அதை எதிர்த்துச் சமாளிக்கவும் தாக்குதல் நடத்தும் எதிரியைத் திருப்பித் தாக்கி அழிக்கவும் அமெரிக்காவிடம் வல்லமை உண்டு என்று அமெரிக்கபாதுகாப்பு மந்திரி தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர்களுக்கு வீடமைப்புத் திட்டம்

### உப குழு பரிசீலனை செய்யும்

கொழும்பு, செவ்வாய்

ஆசிரியர்களுக்கு அரசாங்க வீடமைப்புத் திட்டம் பற்றிய யோசனையைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு உப குழுவை நியமிப்பதென்று தேசிய கல்விக் கமிஷன் தீர்மானித்துள்ளது.

பாடசாலைகளுக்குச் சமீபத்தில் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் வீடமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் ஆசிரியர்களின் வீட்டு வாடகைப் படியைக் கழித்துக் கொள்வதன் மூலம் இச்செலவைச் சமாளிக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனையை உப குழு பரிசீலனை செய்யும்.

தம...

## தரகர்களுக்கு தண்டனை

### சட்டவிரோதக் குடியேற்ற தடுப்பு நடவடிக்கை

சென்னை, பெப். 6

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாகக் குடியேறுவதைத் தடுப்பதில் தமிழ்நாடு விசேஷ பொலிஸாரும் ஸ்தல பொலிசாரும் இதர அதிகாரிகளும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சென்ற நவம்பர் மாதத்தில் இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் குடியேற முயன்றதாக எட்டுப்பேர்களும் ஆறு தரகர்களும் கைது செய்யப்பட்டனர். அதே மாதத்தில் இலங்கையில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென்று 108 பேர் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். இவர்கள் கொடுத்த தகவலின்மீது இரண்டு தரகர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே மாதத்தில் 50 தரகர்கள் தண்டிக்கப்பட்டனர்.

டிசம்பர் மாதத்தில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென்று இலங்கை அரசாங்கம் 61 பேர்களைத் திருப்பி அனுப்பியிருந்தது. டிசமபர் மாதத்தில் சட்டவிரோதமாகக் குடியேற முயன்றதாக எட்டுப்பேரும் ஏழு தரகர்களும் கைது செய்யப்பட்டனர். மற்றும் ஒன்பது பேர்களுக்கும் 42 தரகர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டது.

கிரிக்கட்

## இங்கிலாந்துக்கு 507 ரன்கள்

கராச்சி, பெப். 6

இங்கிலாந்துக்கும் பாகிஸதானுக்குமிடையே நடைபெற்று வரும் 3-வது கிரிக்கட் டெஸட் போட்டியில் இங்கிலாந்து தன் முதல் இன்னிங்சில் 507 ரன்கள் எடுத்தது. பாகிஸதான் முதல் இன்னிங்சில் எடுத்த ரன்கள் 253 ஆகும்.

பாகிஸதான் தனது இரண்டாவது இன்னிங்சில் ஆட்ட நேர முடிவுவரை 2 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 147 ரன்கள் எடுத்துள்ளது.

## பூமியதிர்ச்சி

டோக்கியோ, பெப். 6

டோக்கியோவுக்குச் சமீபத்தில் யொக்கலஹோமா என்ற இடத்தில் இன்று கடுமையான பூமியதிர்ச்சியொன்று ஏற்பட்டது.

## பின்லாந்து தேர்தல்

### விவசாயக் கட்சி வெற்றி

லண்டன், பெப். 6

பின்லாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இதுவரை விவசாயக் கட்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது. விவசாயக் கட்சிக்கு 56 ஸதானங்களும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு 47 ஸதானஙகளும் கிடைத்துள்ளன. சமூக ஜனநாயகக் கட்சிக்கு 3 ஸதானங்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

# டோக்கியோவில்மாணவர்

## அமெரிக்க எதிர்ப்புஆர்ப்பாட்டம்

### ரொபர்ட் கென்னடி முன்னிலையில்!

டோக்கியோ, பெப். 6

டோக்கியோ பல்கலைக் கழகம் ஒன்றுக்கு அமெரிக்க அட்டர்னி ஜெனரலும், ஜனதிபதியின் சகோதரருமான திரு. ரொபர்ட் கென்னடி இன்று விஜயம் செய்தபோது பல்கலைக்கழக மாணவர்கள் அமெரிக்க எதிர்ப்பு சுலோகங்களைக் கோஷித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

திரு. ரொபர்ட் கென்னடி அமர்ந்திருந்த மேடையில் ஏறுவதற்கும் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் முயற்சி செய்தனர் எனக் கூறப்பட்டது.

ஒலிபெருக்கி இயங்காமல் செய்யப்பட்டதாகவும் சுமார் பத்து நிமிஷங்கள் அங்கு 'கொந்தளிப்பான' நிலைமை நிலவியதாகவும் அறிவிக்கப்பட்டது.

திரு. ரொபர்ட் கென்னடி

## In the District Court of Anuradhapura

In the matter of the estate and effects of Suppar Nagalingam Thurairajah of Five Acres, Elakattu Road, Anuradhapura.

Deceased.

AND

In the matter of the Appointment of a Guardian-ad-Litem of the minors:

1. Kokilakumari Thurairajah,
2. Krishnakumari Thurairajah,
3. Pushpakumari Thurairajah,
4. Sushilakumari Thurairajah all of Five Acres Elakattu Road, Anuradhapura.

Minors.

Aylandeswary Thurairajah of Five Acres, Elakattu Road, Anuradhapura.

Petitioner-

Vs.

1. Kokilakumari Thurairajah,
2. Krishnakumari Thurairajah,
3. Pushpakumari Thurairajah,
4. Sushilakumari Thurairajah, and
5. Nagalingam Theivanaipillai all of Five Acres, Elakattu Road, Anuradhapura.

Respondents.

This action coming on for disposal before C. V. Udalagama Esquire, District Judge of Anuradhapura on the 15th day of January, 1962 in the presence of Mr. S. Natarajah Proctor on the part of the petitioner.

And the affidavit of the petitioner having been read

It is hereby ordered that the 5th respondent he and she is hereby appointed Guardian-ad-Litem of the minors abovenamed unless the respondents shall on or before the 27th day of February, 1962 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

And it is further ordered that the petitioner, as the widow of the said deceased, is entitled to have Letters of Administration to his estate issued to her unless the respondents shall on or before the 27th day of February, 1962 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Sgd. C. V. Udalagama
*District Judge.*

The 15th day of January, 1962.
Drawn by
Proctor for Petitioner.


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
ப்பாணம்.


# ராஜாஜிமீது நடவடிக்கை

## தேர்தலும் அஷ்டகிரக சேர்க்கையும்

திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தொகுதியிலிருந்து டில்லி சட்டசபைக்கு, பழைய டில்லி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி காங்கிரஸ் சார்பில் நின்றதும், அவரை எதிர்த்து சுதந்திராக் கட்சிசார்பில் நிறுத்தப்பட்ட ஓ. தங்கசாமி கடைசிநேரத்தில் வாபஸ் வாங்கிக்கொண்டதால், கிருஷ்ணமாச்சாரி போட்டியில்லாமல் வெற்றிபெற்றதும் தெரிந்ததே! இது குறித்து சுதந்திராக்கட்சி தலைவர் ராஜாஜி சில அறிக்கைகள் வெளியிட்டார். கூட்டங்களிலும் பேசினர்.

இதுசம்பந்தமாக, ராஜாஜிக்கு தங்கசாமி ஒரு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார் அதில் அவர் கூறியிருப்பதாவது:—

திருச்செந்தூர் (டில்லி சட்டசபை) தொகுதி தேர்தல்பற்றி நீங்கள் (ராஜாஜி) வெளியிட்ட அறிக்கைகளிலும், பேசிய பேச்சுக்களிலும் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் சில விஷயங்கள், என்னுடைய செல்வாக்கையும், எதிர்காலத்தையும் பாதிப்பதாக உள்ளன. உங்களுடைய அறிக்கைகள் அவதூறானவை. போட்டியிலிருந்து விலக நான் லஞ்சம் வாங்கியிருக்க வேண்டுமென்று, உங்கள் அறிக்கைகளில் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது உண்மைக்கு மாறானது. இத்தகைய ஆதாரமற்ற-பொய் அறிக்கைகளை ஒரு பெரியமனிதர் வெளியிடுவது வருந்ததத்தக்கது. எனவே உங்கள் அறிக்கையிற் குறிப்பிட்ட விஷயங்கள் உண்மையல்ல என்று நீங்கள் ஒரு அறிக்கை வெளியிடவேண்டும். முன்பு வெளியிட்ட அறிக்கைகளை நிபந்தனையில்லாமல் வாபஸ்பெறவேண்டும். இதுகுறிதது உங்களிடமிருந்து வரும் பதிலைப் பொறுத்துத்தான், நான் இனி எடுக்கவேண்டிய மேல்நடவடிக்கைகள்பற்றி முடிவுசெய்யவேண்டும்."

### இரண்டுநாளில் தேர்தல் முடிவுகள்

தமிழகத்தில் பொதுத்தேர்தலில் வாக்கெடுப்பு முடிந்தபின்பு 99 தொகுதிகளில் இம்மாதம் 25 ம் தேதியன்று வாக்கு எண்ணிக்கை தொடங்கப்பட்டு முடிவுகள் தெரிவிக்கபபடு

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

மென்றும் மீதமுள்ள தொகுதிகளில் 26ந்திகதி வாக்குகள் எண்ணிக்கைத் தொடங்கப்பட்டு முடிவு தெரிவிக்கப்படும் என்று அறிவக்கப்பட்டுள்ளது.

### காங்கிரஸ் தலைவர்
### தி.மு.க.கொடியை ஏற்றினர்.

வலங்கைமானை அடுத்தது. மேலவிசாரம் கிராமம் இங்கு தி. மு. கழகத்தின் கொடிகள் இரண்டு காணமற்போய் விட்டன. இதுசம்பம்தமாக இளைஞர் காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. கருப்பையாவிடம் தி. மு. கழகத்தினர் புகார் செய்தார்கள். தி. மு. கழகத்தினர் கொடியை அப்புறப்படுத்தியது காங்கிரஸ் காரர்கள் தானென்றும், இதுபற்றி விசாரிக்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்: இதுபற்றிக் கவனிப்பதாக அவர் உறுதிகூறினர். பிறகு தி. மு. கழகத்தினர் இதுபற்றிப் பொலிசில் புகார் செய்ய ஏற்பாடு செய்தார்கள். இதனல் இருகட்சிகளுக்கும் மோதல் ஏற்படும் நிலையேற்பட்டது. அதைத் தடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் பிரமுகர் கருப்பையா கருதினர். உடனே தி. மு. கழகப் பிரமுகர்களை அழைத்துக் கலந்து பேசினர். "நமக்குள் தகராறு வேண்டாம். சமரசமாய் போய்விடலாம். அதற்காக உங்கள் கழகக்கொடியை நானே ஏற்றிவைக்கிறேன் என்றுகூறினர். அதன்படி இரண்டு தி. மு. கழகக் கொடிகளை இளைஞர் காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. கருப்பையா ஏற்றிவைத்தார்.

### சுதந்திராகட்சியை ஆதரிக்க தி. மு. க. முடிவு

சாத்தூர் தொகுதியில் போட்டியிடும் சுதந்திரா கட்சி அபேட்சகரை ஆதரித்துத் தேர்தல்ப் பிரசார செய்வதென்று திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் முடிவுசெய்திருப்பதாகத் தெரிகிறது. விருது நகர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூட்டம் திரு. சுப்பையா தலைமையில் நடைபெற்றது. சாத்தூர் தொகுதியில் திராவிடமுன்னேற்றக்கழகம் போட்டியிடவில்லையாதலால் சுதந்திரா கட்சி சார்பில் போட்டியிடும் அபேட்சகர் திரு. பி. ராமமூர்த்தியை ஆதரரித்துப் பிரசாரம் செய்யவேண்டுமென்று திராவிடமுன்னேற்றக்கழக மேலிடம் கட்டளையிட்டிருப்பதாக திரு. அருசாமி கூறினர் சாத்தூர்வட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. அரங்கநாதன் இதனை ஆதரித்துப் பேசினர்.

### தேர்தலும் எட்டுக்கிரக சேர்க்கையும்

எட்டுக் கிரகங்களின் சேர்க்கையின் விளைவாக தேர்தலுக்குப் பிறகும் காங்கிரஸ ஆட்சியே நீடிக்குமென்று, சென்னையை சேர்ந்த ஒரு பிரபல ஜோதிடர் கருத்துத் தெரிவிக்கிறார். சனிதனது வீடான மகரராசியில் தொடர்ந்திருப்பதாலும், மகர ராசியிலிருந்து கும்பராசிக்கு வியாழன் மாறுவதாலும் பொதுத் தேர்தலுக்குப் பிறகும் தற்போதுள்ள நிர்வாகமே (காங்கிரஸ் ஆட்சியே) நீடிக்கும் என்றும் அவர் சொன்னர்.

### தி. மு. க. வில் மீண்டும் ஆசைத்தம்பி

அண்மைக் காலமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் சரியான ஈடுபாடு இல்லாமல் இருந்துவந்த திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. இனி பழையபடி கழகத்தில் தீவிர ஈடுபாடு கொள்வார். அவர் நேற்று நுங்கம்பாக்கம் தி. மு. க. தோழர்களுடன் காஞ்சிபுரம் சென்று திரு. அண்ணாத்துரையை அவரது இல்லத்தில் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் உரையாடினர். இந்த உரையாடலின் பயனக திரு. ஆசைத்தம்பி மேற்சொன்ன முடிவுக்கு வந்திருக்கிறார். மீண்டும் ஒரு முறை இவர்கள் சந்திப்பு நிகழுமென்றும் இதன்பின் தேர்தலில் இவர்கள் கைகோர்த்து நிற்பார்களென்றும் தி. மு. க. வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

### காங்கிரஸை கம்யூனிஸ்ட் ஆதரிக்காது

பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சி. என். அண்ணாத்துரையை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கும் என்று செய்தி வெளியானது தெரிந்ததே. அதை, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தி மறுத்திருக்கிறார். அவர் கூறியதாவது:—

காஞ்சீபுரத்தில் தி. மு. க. கழகத் தலைவர் அண்ணாத்துரையை எதிர்ப்பது என்றும். அங்கு போட்டுயிடும் காங்கிரஸ அபேட்சகரை ஆதரிப்பது என்றும் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்ததாக கூறப்படுவது தவறு. இந்த தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் யாரையும் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்காது. தமிழ் நேசிய கட்சித் தலைவர் ஈ. வெ. கி. சம்பத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு தராது என்ற செய்தியும் சரியல்ல. சம்பத் பற்றி நாங்கள் ஒரு முடிவும் எடுக்கவில்லை.

### காணிக் கச்சேரி

வவனியா, செவ்வாய்

வவனியாவில் உள்ள பாமர மக்களுக்கு பூந்தோட்டம், மூன்று முறிப்பு, தாண்டிக்குளம், பண்டாரிகுளம் ஆகிய இடங்களில் உள்ள முடிக்குரிய காணிகளில் அரை ஏக்கர் ஒவ்வொருவருக்கும் கொடுபட இருக்கின்றது. இது சம்பந்தமான நேர்முகப் பரீட்சை பங்குனி 6-ந் திகதி நடைபெறும்.

### பட்டினசபையின் புதிய தலைவர்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பு தென்தொகுதியைச் சேர்ந்த காத்தான்குடி பட்டினசபைத் தேர்தல் அண்மையில் நடைபெற்றது.

பட்டினசபைத் தலைவராக, முன்னை நாள் தலைவர் ஜனப் எம். ஐ. எம். காசீம் ஹாஜியார் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். அவர் தொடர்ந்து 15 வருடம் இப்பட்டினசபையின் அங்கத்தவராகக் கடமையாற்றியுள்ளார். உபதலைவராக ஜனப் எம். எம். முகமதலியார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ வருடம் தை மாதம் 25-ம் தேதி (7-2-62) புதன் கிழமை முன்னிரவு 11-46 வரை திருதியை. அதன் பின் சதுர்த்தி. அன்று பின்னிரவு 3-12 வரை பூரட்டாதி. அன்று பின்னிரவு 42-57 வரை மரண யோகம். நற்கருமங்களுக்கு இன்று உகந்த காலமன்று. பகலத் பிரார்த்தனை நலம் தரும்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்தில் பிறந்தவர்களுக்கு இவ்வாண்டில் சாதாரண பலனே கிடைக்கும். நிதானத்தாலும் பொறுமையாலும் கஷ்ட பலன்களையும் நற்பலன்களாக மாற்றிக்கொள்ளலாம் அவசர புத்தியும் கோபக் குணமும் கஷ்டம்தரும். உத்தியோகத்துறையினர் மேலதிகாரிகளுடன்பொறுமையாகநடந்துகொள்வதுஅவசயம்.பெண்களுக்கு வருடத்தின் பிற்பகுதியில் நற்பலன்கள் அதிகம் இருக்கும். வாராந்த பலன்களைப் பார்த்து தக்கபடி நடக்கவும்.

அச்சுவினி: தார்மீக செலவு, தெய்வ வழிபாடு.

பரணி: கல்விவிருந்தி, மன நிம்மதி.

கார்த்திகை: வீண் அலைச்சல், மனநிம்மதியின்மை.

ரோகிணி: நல்லோர் சேர்க்கை, ஊக்கம்.

மிருகசீரிடம்: மாதுருவழி உதவி, குடும்ப சந்தோஷம்.

திருவாதிரை: அலைச்சல் அதிகம், கடன்படல், செலவு

புனர்பூசம்: தொழில்விருத்தி, சுகம், பணவரவு.

பூசம்: வித்தை விருத்தி, வாக்கு நன்மை, சுகம்.

ஆயிலியம்: குடும்ப நலக் குறைவு, இன்ப சிந்தனை.

மகம்: உடன்பிறந்தோர் உதவி, மன நிம்மதி.

பூரம்: முதியோர் பகை, அவசர நடத்தையால்சஞ்சலம்.

உத்தரம்: பெரியவர் புத்தி கேளாது நடத்தல், கஷ்டம்.

அத்தம்: வாக்கு நன்மை, பணவரவு.

சித்திரை: தெய்வவழிபாடு, நலம், காரியசித்தி.

சுவாதி: பிரயாணசுகம், குடும்ப நலம், பணவரவு.

விசாகம்: கடும் உழைப்பு, பலிதக்குறைவு.

அனுஷம்: தார்மீக சிந்தனை, குடும்ப நலம், சுகம்.

கேட்டை: நல்லோர் தரிசனம், உயர் மதிப்பு, புகழ்.

மூலம்: பிதுருவழியோசனை, தருமச்செலவு.

பூராடம்: மாதுருவழி உதவி, குடும்ப சுகம்.

உத்தராடம் இழிந்தோர் கூட்டு, மதிப்பிழத்தல்.

திருவோணம்: செய்தொழில் இலாபம், பணவரவு.

அவிட்டம்: கடும் உழைப்பு, அகாலபோசனம்,சுகக்குறைவு.

சதயம்: பணவரவு. முதியோர் கூட்டு, சுகம்.

பூரட்டாதி: பகைவர் கஷ்டம், காரியத் தடை, சிந்தனை.

உத்திரட்டாதி :தெய்வ வழிபாடு, தருமச்செலவு, சந்தேகம்.

ரேவதி: தார்மீக செலவு, செய்தொழில் நலம்.

### பண்டித வகுப்புக்கள்

யா. ஆ. தி. பா. வி. சங்கத்தால் நடத்தப்படும் பண்டித, பாலபண்டித வகுப்புக்கள், 3—3—62 சனிக்கிழமை வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் மீண்டும் ஆரம்பமாகி வழமைபோல் நடைபெறும் மிகத் திறமைவாய்ந்தவர்கள் கற்பிப்பார்கள். வகுப்புக்களிற் சேர்ந்து படிக்க விரும்புவோர், 28-2-62 க்குமுன் காரியதரிசிக்கு விண்ணபபிக்க வேண்டும்.

ஆர். எஸ். பாமர்,
காரியதரிசி.

கல்விக்கந்தோர்,
யாழ்ப்பாணம்.
3-2-62.

# அல்ஜீரிய தீர்வுக்கு பிரெஞ்சு யோசனை

## விரைவில் வெளியாகும் என டிகால் அறிவிப்பு

பாரிஸ், பெப். 6

**பிரெஞ்சு ஜனாதிபதி ஜெனரல் டிகால் நேற்று ரேடியோ டெலிவிஷனில் உரை நிகழ்த்தும்போது அல்ஜீரியப் பிரச்னைக்கு சமாதானப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாணப்படும் எனக் கூறினார்.**

பிரான்ஸின் இது சம்பந்தமான யோசனை விரைவில் வெளிவரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அல்ஜீரியர், தன் வாழ்க்கையைத் தானே தீர்மானித்துக் கொள்ளவேண்டும் என விரும்புகிறேன். சுய நிர்ணய அல்ஜீரியாவில் அங்குள்ள பிரெஞ்சுக்காரர்களின் உரிமை, சஹாராவில் பிரான்சுக்குள்ள அத்தியாவசிய நலன்கள் ஆகியன மனதில் கொள்ளப்படவேண்டும்" என்றும் அவர் கூறினர்.

அல்ஜீரியாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்கள் டிகால் எதிர்ப்பு நடவடிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி டிகாலின் பிரசங்கத்தை மக்கள் கேட்கவிடாமல் செய்வதற்காக டெலிவிஷன் கோபுரத்தை வெடிவைத்துத் தாக்கவும் அவர்கள் முயற்சித்தனர். ஆனல் இது பலிக்கவில்லை.

ஜனாதிபதி டிகால் தமது பிரசங்கத்தில் இவ்வாண்டு இறுதிக்குள் பிரான்ஸ் அணு ஆயுத டிவிஷன் ஒன்றை அமைககுமென்றும், இதன் பெரும் பகுதி ஜெர்மனியில் கடமையாற்றும் என்றும் அறிவித்தார்.

## போர்த்துக்கேய கைதிகள்

புதுடில்லி, பெப். 6

பம்பாயிலிருந்து போர்த்துக்கீசிய கைதிகளைத் திருப்பியனுப்ப விருப்பமான திகதியொன்றைக் குறிப்பிடுமாறு இந்தியா போர்த்துக்கலைக் கேட்டிருக்கிறது. அதேசமயம் காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தியர்களை விடுவிக்குமாறும் அது கோரியிருக்கிறது.

## இந்தியாவுக்கு பாராட்டு

புதுடில்லி, பெப் 6

அமெரிக்காவிலிருந்து பெறும் உணவுப்பொருட்களை மிகச் சிறந்த முறையில் இந்தியா உபயோகித்துவருவதாய் இங்குள்ள அமெரிக்கத் தூதர் பாராட்டினர். ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் அது அடைந்துவரும் முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினர்.

## படை வீரர் கடத்தப்பட்டனர்

ஷில்லாங், பெப். 5

கரீம்-சில்ஹெட் எல்லையில் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த மூவர் சில தினங்களுக்கு முன்னல், பாகிஸ்தானி படைகளால் கடத்திச் செல்லப்பட்டனர் என்று இங்கு கிடைத்த நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

சில்ஹெட்டிலுள்ள ராணுவச் சிறையில் அவர்கள் வைக்கப்பட்டிரும்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தியப் பிரதேசத்திற்குள் அத்துமீறி நுழைந்து, பாதுகாப்புப் படையினரைக் கடத்திக் கொண்டு போனதைக்குறித்து அஸ்ஸாம் அரசாங்கத்தால் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் உடை ஏலம்

கம்பஹா, செவ்வாய்

கம்பஹா பொலிஸ் நிலையத்தில், பொலிசாரினல் பாவிக்கப்பட்ட 'யூனிபோம்கள்' ஏல விற்பனைக்கு விடப்பட்ட சமயம் ரூ. 7028-10 வசூலாகியது.

## நித்திரையின் போது கைது செய்யப்பட்டார்

கம்பஹா, செவ்வாய்

பொலிஸார் தேடித் திரிந்த மாறவிலா என்ற இடத்தைச் சேர்ந்த ஏ. விமலதாசா என்பவர் கம்பஹாவைச் சேர்ந்த திரு. திசநாயக்கா என்பவருக்குச் சொந்தமான வீட்டின் கூரையில் நித்திரை செய்து கொண்டிருந்த சமயம் கம்பஹா பொலிஸாரினல் கைது செய்யப்பட்டார்.

கம்பஹா மாஜிஸ்டிரேட் திரு எஸ். எஸ். குலதிலகா, விமலதாசாவை இம்மாதம் 8-ம்திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

விமலதாசா ஏழு வழக்குகளில் சம்பந்தப் பட்டிருக்கிறர் எனக்கூறப்படுகிறது.

## சாரணர்இயக்க பொனவிழா பயிற்சி

மாவிட்டபுரம், திங்கள்

கொழும்பில் இம்மாத இறுயில் நடைபெற இருக்கும் சாரஇயக்க பொன்விழாவில் கலந்துகொள்ள இருக்கும் யாழ்ப்பாணப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு யூனியன் கல்லூரியில் சென்ற சனிக்கிழமை பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் எட்டுப்பாடசாலைகளைச்சேர்ந்த சுமார் 120 சாரணர் கலந்து கொண்டனர். இவர்களுக்கு மேலும் பயிற்சியளிப்பதற்காக இம்மாதம் 10-ம்திகதியாழ்ப்பாணம்பழைய பூங்காவில் கூட ரமடித்துமுகாமிடப்படும்.

மாவிட்டபுரம், திங்கள்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக் கோஷ்டிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி மழைகாரணமாக வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

தேர்தல்

## லோகசபைக்கு 1979 அபேட்சகர்கள் போட்டி
### காங்கிரஸ் 485 தொகுதிகளில் நிற்கிறது

புதுடில்லி, பெப், 6

லோகசபை ஸ்தானங்களுக்கு 1957-ம் ஆண்டு தேர்தலைவிட இவ்வாண்டு 386 அபேட்சகர்கள் அதிகமாகப் போட்டியிடுகிறர்கள்.

1957-ம் ஆண்டு 1593 அபேட்சகர்கள் போட்டியிட்டனர். இவ்வாண்டு 1979 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்

இதுவரை 3 காங்கிரஸ் அபேட்சகர்கள் லோகசபைக்குப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

காங்கிரஸ் 485 ஸ்தானங்களுக்குப் போட்டியிடுகிறது. ஜனசங்கம் 198 ஸ்தானங்களுக்கும், சுதந்திராக் கட்சி 172 ஸ்தானங்களுக்கும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி 166 ஸ்தானங்களுக்கும், கம்யூனிஸ்ட் கட்சி 137 ஸ்தானங்களுக்கும், சோஷலிஸ்ட் கட்சி 107 ஸ்தானங்களுக்கும் போட்டியிடுகின்றன. இன்னும் பல கட்சிகளும் போட்டியிடுகின்றன.

## மே. இரியன் தீர்வு பற்றி யு. எஸ். கொள்கை

வாஷிங்டன், பெப். 6

மேற்கு இரியன் பிரச்னை ஐ. நா. தலைமைக் காரியதரிசியின் முயற்சிமூலம் தீர்க்கப்படுவதை அமெரிக்கா ஆதரிப்பதாய் ராசாங்க இலாகா அறிவித்தது.

## எலிஸபெத் மகாராணி

லண்டன், பெப். 6

35 வயதான பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத், இன்று தன் தென்னமெரிக்கச் சுற்றுப் பிரயாணத்திற்காகப் புறப்படுகிறர். 2 மாதம் அவர் சுற்றுப் பிரயாணம்செய்வார்.

## பிரிட்டனில் 30 லட்சம்பேர் வேலைநிறுத்தம்

லண்டன், பெப். 6

பிரிட்டனில் கப்பல், விமான, கார் உற்பத்தி தொழிற்சாலைகளைச் சேர்ந்த 30 லட்சம் தொழிலாளர் நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். சம்பள உயர்வு கோரி இவ் வேலைநிறுததம் நடைபெற்றது.

## பரீட்சையில் தோற்றவர் பட்டம்பெற்ற விந்தை!

மைசூர், பெப். 5

பரீட்சையின் எல்லாப் பிரிவுகளிலும் தேர்வுபெருத போதிலும் ஒரு வைத்தியக் கல்லூரி மாணவர் பாஸானதாக அறிவிக்கப்பட்டு 1960 அக்டோபரில் பட்டம் வழங்கப் பட்டார்.

மைசூர் சர்வகலாசாலையில் முதல் தடவையாக இந்த விசித்திர சம்பவம் ஏற்பட்டது.

ஆர். எஸ். சுரேந்திரா என் மாணவர் எம். பி. பி., எஸ். இறுதிப் பரீட்சையில் இரு பிரிவுகளில் தோற்றுர். இற அதிகாரிகளின் கவனத்திலிருந்து தப்பியதால் அவருக்குப் பட்டமளிக்கப்பட்டது.

பிறகு தவறு கண்டு பிடிக்கப்பட்டு விஷயததை கமிட்டி ஒன்று பரிசீலித்தது. பட்டத்தை வாபஸ் பெற்று, ஆப்தல்மாலஜி பரீட்சையில் மாணவர் அமர அனுமதிகக செனட் முடிவு செய்தது.




ஒட்டகத்துக்குக்கூட தன்னுடலில் ப்ரோட்டீன் சேமிக்க முடியாது!

அனுதினம் உங்களுக்கு ப்ரோட்டீன் தேவைப் பட்டபோதிலும், உங்கள் தேகம் ப்ரோட்டீனை சேமிக்க சக்தியற்றது. ப்ரோட்டீனேயே தினமும் உங்கள் தேகம் எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாரை உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு செல்களை சரிபடுத்துகின்றது. தினமும் உங்களுக்குப் போதுமான ப்ரோட்டீன் கிடைக்காவிடில் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அது போலவே நீங்களும் சிக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.




ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு அனுதினம் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.

ப்ராண்ட்ஸ்

எஸன்ஸ் ஓப் சிக்கன்

AT-712-1

## மணி வாக்கு

"ஒரு மனிதன் என்ன பேசுகிறான் என்பது முக்கியமல்ல. எதற்காக அப்படிப் பேசுகிறான் என்பதை ஆராய்வதே முக்கியம்"


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு தை மீ 25உ (7-2-62)


## காஷ்மீரும் பாகிஸ்தானும்

காஷ்மீர் விவகாரத்தை மார்ச் மாதம் வரை ஒத்திவைப்பதென ஐ. நா. பாதுகாப்புச் சபை முடிவு செய்திருப்பது இந்தியாவின் தலையிடியைக்குறைத்திருக்குமெனலாம்.

பொதுத் தேர்தல் முடிவடைந்து புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பையேற்கும் வரை, காஷ்மீர் விவகாரத்தை பின் போடவேண்டுமென இந்தியா விரும்பியது. ஐ. நா. பாதுகாப்புச் சபையும் அதற்கு இணங்கி விவாதத்தை ஒத்திவைத்திருக்கின்றது.

1957 இல் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெற்றபோதும், பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சினையைக் கிளப்பத்தவறியதில்லை. பாகிஸ்தானில் சென்ற பதினைந்து வருட காலமாக ஒரு பொதுத் தேர்தலும் நடைபெறவேயில்லை. அங்கு இப்போதும் இராணுவ ஆட்சியே நிலவுகின்றது. இந்த அழகில், பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெறுவதாய் இல்லையே என்று, அங்குள்ள மக்கள் எண்ணுவது இயல்பே. இந்த எண்ணத்தைத் திசை திருப்புவதற்காகவே பாகிஸ்தான் இந்தியாவில் தேர்தல் நடைபெறும் வேளையில் காஷ்மீர் பிரச்சினையைக் கிளப்புகின்றதெனக் கருதினால் அது தவறாகாது.

கோவா நடவடிக்கை காரணமாக ஐரோப்பிய நாடுகள், இந்தியாமீது அதிருப்திகொண்டிருக்கின்றன. இச் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிவிட பாகிஸ்தான் எவ்வளவுதான் முயன்றாலும், காஷ்மீர் விவகாரத்தில் மேற்கு நாடுகளின் அக்கறை தேய்ந்துகொண்டே வருகின்றது. பாதுகாப்புச்சபையில் மார்ச் மாதம் காஷ்மீர் பிரச்சினை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், பாகிஸ்தான் எண்ணுவது போல அதற்குச் சாதகமாகக் காரியங்கள் நடைபெறுமென எதிர்பார்க்க முடியாது.

## தற்கொலை ஆராய்ச்சி

இலங்கையில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாகத் தற்கொலை புரிகின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் மேற்கொண்ட ஆராய்ச்சியிலிருந்து அறிய முடிகின்றது. உலகில் தற்கொலையின் போக்கு எவ்வாறு அமைகின்றதென்பதை விரிவாக அறிவதற்காகவே இந்தப் புள்ளி விபர மதிப்பீடு உலக சுகாதார ஸ்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சியின்படி ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாகத் தற்கொலை புரியும் ஆறு நாடுகளில், இலங்கை ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. இத்தாலி, போர்ச்சுக்கல், வெனிசுலா, இஸ்ரேல், மேற்கு பேர்லின் என்பன ஏனைய ஐந்து நாடுகளுமாகும். பதினைந்து வயதுக்கும் பத்தொன்பது வயதுக்கும் இடைப்பட்ட பெண்களே அதிகமாகத் தற்கொலை புரிகின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்கொலை புரிவதின் அடிப்படைக் காரணங்கள் இன்னும் ஆராயப்படவில்லை. இதுவும் விரைவில் உத்தியோக ரீதியில் மேற்கொள்ளப்படுமென சுகாதார இலாகா தெரிவிக்கின்றது.

இலங்கையில் தற்கொலைகள் அதிகமாக நடைபெறுவதைத் தினமும் கேள்விப்பட்டுவருகின்றோம். வாழ்க்கைமீது ஏற்படும் வெறுப்பும், கணவன்—மனைவி தகராறும் தற்கொலைக்குக் காரணமாவதுமுண்டு. பொருளாதார ஏற்றத் தாழ்வும் ஒரு சிலரை இத்தகைய முடிவுக்குத் தள்ளிவிடுகின்றன. இளம் பெண்கள் காதல் விவகாரம் காரணமாக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியிடுவதுமுண்டு. காதல் போயிற் சாதலே மேல் என இவர்கள் எண்ணுகின்றனர் போலும்! காரணம் எதுவானாலும் உலகில் வாழப்பிறந்தவர்கள் தமது உயிரைத் தாமே போக்குவது மனித வர்க்கத்துக்கே அவமானமாகும். தற்கொலையின் காரணங்களை விரிவாக ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் சலியாது உழைககுமாயின் அது ஒரு புனிதப் பணியாகவே கருதப்படும்.

# வீதி காய்ந்திருந்தால் ஒரு கவலையும் இல்லை

## கார் விபத்துகளைத் தவிர்க்க வழி

**இலங்கையில் ஒவ்வொரு வருடமும் வீதி, விபத்துகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. வீதி ஒழுங்குகள் சரிவரக் கவனிக்கப்படாதிருப்பதும் ஒரு காரணம் எனலாம். எனினும் பொலிசாரின் விசேஷ ஏற்பாடுகள் மூலம் விபத்துக்களைத் தடுக்க அரசாங்கம் முயன்றுவருகின்றது. விபத்துக்களால் ஏற்படும் மரணங்களும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.**

**சென்ற டிசம்பரில் கொழும்பில் மாத்திரம் 6,247 வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இதில் 47 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 129 பேர் காயத்துக்குள்ளாயிருக்கின்றனர். இப் புள்ளி விபரமே இலங்கை முழுவதைப்பற்றியும் தெரிந்துகொள்ளப் போதுமானது.**

**கார் விபத்துக்கு வீதிகள் மோசமாக இருப்பதும் காரணமாகும் வீதிகள் காய்ந்திருந்தால் ஒரு கவலையுமில்லை. எந்தடயரும் வழுக்காது. ஈரமான வீதிகளில் விபத்துக்களை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதை இக் கட்டுரை ஓரளவுக்கு விளக்குகின்றது.**

ஈரமான வீதியில் மோட்டார் கார் வழுக்கி விழத்தான் வேண்டுமா? மேற்கு ஜெர்மனி நடத்தியிருக்கும் ஆராய்ச்சியின் விளைவுகளைப் பார்க்கும்போது, ஈரமான வீதியில் கார்கள் வழுக்கி விழவேண்டிய அவசியமில்லை என்று தோன்றுகிறது. ஈரமான வீதியில் கார் போகும்போது டயருக்கும், வீதியின் மேல் பரப்புக்குமிடையே என்ன நடக்கிறது என்பதை இரண்டு நிபுணர்கள் ஆராய்ந்தார்கள். கார் போகும்போது, டயருக்கும் வீதியின்மேல்பரப்புக்குமிடையில் நீர்ப்படலம் ஒன்று உருவாகிறது. டயரின் றப்பருக்கும், தண்ணீருக்குமிடையே ஒரு இடைவெளியும், தண்ணீருக்கும் வீதிப் பரப்புக்குமிடையே ஒரு இடைவெளியுமாக இரண்டு இடைவெளிகள் ஏற்படுகின்றன. இந்த இடைவெளிகளையும் மிஞ்சிக்கொண்டு டயர் வீதிப் பரப்பை உறுதியாகப் பற்றிக்கொள்ளவேண்டும்; அதற்குத் தக்கபடி டயரின் பற்றும்தன்மை வலுவாயிருக்கவேண்டும்.

### இரு வகை

திடப் பரப்புகளைத் தண்ணீர் வெவ்வேறு அளவுகளில் பற்றுகிறது. திடப் பரப்புகளிலேயே இரண்டுவகைகள் உண்டு நீரை விரும்பும் பரப்புகள் ஒருவகை; நீரை வெறுக்கும் பரப்புகள் மறுவகை. நீரை விரும்பும் பரப்புகளின் மேல் தண்ணீர் ஒரே சீரான மெல்லிய திரைபோல் பரவுகிறது; நீரைவெறுக்கும் பரப்புகளின் மேல் தண்ணீர் சிறு சிறு சொட்டுகளாக, தனித்தனியாகப் பரவி நிற்கின்றன. இந்தச் சொட்டுக்களை உன்னிப்பாக ஆராய்ந்தால் அவை பரப்பின்மேல் பெரியதொரு கோணத்தில் விழுந்துகிடப்பது தெரியும். இந்தமாதிரிப்பரப்பில் தண்ணீருடைய இடைவெளி முரண்பாடு தீவிரமாய் இருப்பதால், தண்ணீர் வீதிப்பரப்பில் ஒட்டாமல் ஒளித் தனிச் சொட்டுக்களாக நின்றுவிடுகிறது.

### ஒரு காரணம்

இந்த இடைவெளி முரண்பாட்டை நீக்கி தண்ணீருக்கும் வீதியின் பரப்புக்குமிடையே பற்று உண்டாகும் பொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. டயர்களின் மேற்பரப்பில் பூச்சுக்காக உபயோகிக்கும் ரப்பர்க் கலவையில் நீரை வெறுக்கும் பொருள்கள் எதையும் சேர்க்கக்கூடாது. அந்தப் பொருள்களை ஒதுக்கினால் டயரின் மேற்பரப்பு நீரை விரும்பிப் பற்றிக்கொள்ளும். இத்தகைய டயர் வீதியின்மேல் ஓடும்போது வழுக்குவதில்லை. "தண்ணீர் ஒட்டாமல் இருந்தல் தானே வழுக்கி விழும் வாய்ப்புக் குறையும்?" என்று சிலர் வாதிக்கக்கூடும். ஆனால் டயரும் வீதியும், நீரை விரும்பிப் பற்றிக்கொண்டால்தான் கார் வழுக்கி விழாது என்னும் உண்மை உறுதியானது. வீதிகளின் இடை இணைப்புகளில் நீர் புகுந்து விடக்கூடாது. புழுதி சேரக்கூடாது என்பதற்காக, நீரை வெறுக்கும் பொருள்கள் கலந்த தாரை அந்த இடைவெளிகளில் கொட்டி இணைப்பை உறுதிப்படுத்துகிறார்கள். இது தவறான முறை. இதனால் இணைப்புக்களில் தண்ணீர் படியாமல் தனிச் சொட்டுக்களாக நின்றுகொண்டு டயரை வழுக்கிவிட்டுவிடுகிறது. டயருக்கும் வீதிப் பரப்புக்குமிடையே பரஸ்பர எதிர்ப்பு இல்லாமல்போய் விபத்து நேருவதற்கு வீதியின் இந்த அமைப்புமுறையும் ஒரு காரணம்.

### காய்ந்திருந்தால் கவலையில்லை

வீதி காய்ந்திருந்தால் ஒரு கவலையுமில்லை; எந்த டயரும் வழுக்காது. எந்த டயரும் கெடுவதில்லை. ஆனால் பாதை ஈரமாய், வழுக்கக்கூடியதாய் இருந்தால், நீர் விருப்பும் வெறுப்பும்தான் டயரின் தரத்தை நிர்ணயிக்கின்றன. டயரின்மேல் பரப்பு எவ்வளவு வலுவாயிருந்தாலும், வீதியின் நீர் வெறுப்புமூலமாகத் தீமைகளைச் சமாளிக்கமுடியாது. ஆகவே வீதி இணைப்புகளில் நிரப்புவதற்கு நீர் விரும்பும் கலவைகளையே உபயோகிக்கவேண்டும். இந்தக் கலவைமூலம் தண்ணீர் சொட்டுச்சொட்டாய்ப் பிரிந்து நிற்காமல் மெல்லிய திரையாய்ப் பரவுகிறது. டயரின் மேல் பூச்சிலும் நீர் விரும்பும் பொருள்கள் கலக்கப்பட்டிருக்குமேயானால் டயருக்கும் வீதிக்குமிடையே உறுதியான பற்று ஏற்படுகிறது. கார்கள் வழுக்கி விபத்துக்குள்ளாகும் வாய்ப்பு இதனால் வெகுவாகக் குறைந்துவிடுகிறது. காய்ந்த தரைமாதிரி வராது என்றாலும், டயர்—வீதி இணைப்புக் காரணமாக நீர்த்திரை சீக்கிரமாய்க் காய்ந்துவிடுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது

வீதிபோடுவதற்கென உபயோகிக்கப்படும் பொருள்களில் நீர் விருப் முள்ளவை பற்றியும், நீர் வெறுப்பு உள்ளவை பற்றியும் இன்னும் ஆராய்ச்சி நடக்கவேண்டும். தண்ணீரை விரும்பும் பொருள்களை நேரடியாக உபயோகிப்பது பெரும்பாலான வீதிகளின் விஷயத்தில் கடினமாயிராது. வீதி அமைப்பில் இந்தத் தன்மை ஒரே சீராக இருக்கவேண்டும். வீதிகளின் சில பகுதிகளை நீர் விரும்பும் பகுதிகளாகவும், அமைப்பது ஆபத்தானது.

வீதி அமைப்பிலும், டயர் அமைப்பிலும் இந்த அம்சங்களை நினைவில் கொண்டால் மழைக்காலத்துக் கார் விபத்துக்களை ஒரேயடியாக ஒழித்துவிட முடியும்.

## முஸ்லிம் பாடசாலைகளின் 2-ம் தவணை ஆரம்பத்தை பின் போடுக

### அரசினர் இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கை

மட்டக்களப்பு, செவ்வாய்

"1962ம் ஆண்டின் பாடசாலைகளுக்கான தவணை அட்டவணையில், மார்ச்மாதம் 12-ந் திகதி இரண்டாம் தவணை ஆரம்பமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தினத்தில் முஸ்லிம்களுக்கான 'ஷவ்வால்' மாத அன்னதான நோன்புகள் முடிவு பெறுகிருக்கின்றன ஆகையால் முஸ்லிம் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை ஆரம்ப திகதியை பின் போடும்படி இச்சங்கம் வித்தியாபகுதியைக் கேட்டுக் கொள்கிறது."

அகில இலங்கை அரசினர் இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாணக்கிளைப் பொதுக்கூட்டம் அதன் தலைவர் ஜனாப் எம். எம். அப்துல் காதர் தலைமையில் கூடிய போது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"தற்போது முஸ்லிம் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ள சிங்கள ஆசிரியர்கள் எஸ். எஸ். ஸி. தராதரம் மட்டும் பெற்றிருப்பதால் முஸ்லிம் பாடசாலைகளிலுள்ள உயர் வகுப்புகளில், சிங்கள பாடத்தின் தரம் குறைந்துள்ளது. ஆகையால், பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியர்களை முஸ்லிம் பாடசாலைகளில் நியமிக்கும்படி, வித்தியாபகுதியைக் கேட்டுக் கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானமும் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

புதுடில்லி, பெப். 6

பொதுத் தேர்தலின் போது டில்லியிலுள்ள 1385 ஓட்டுச் சாவடிகளிலும் 8300 அதிகாரிகள் கடமையாற்றுவார்கள். டில்லியில் 13,42,000 பேருக்கு வாக்குரிமை உண்டு. நகரின் 5 லோகசபை ஸ்தானங்களுக்கும் 58 பேர் போட்டியிடுகின்றனர்.

ஆசிரியருக்குக் கடிதம்

## மாடும் மனிதனும்

வவுனியாவைச் சேர்ந்த செட்டிகுளம் பழையகாலத்தில் ஒரு புனிதத்த தலமாக விளங்கியது. செட்டிகுளத்தில்பெரும் பகுதி மக்களால் விலக்கப்பட்ட மாட்டிறைச்சியை ஒரு சிலர் மான், மரை என்று சொல்லி விற்பதால் அதனை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுத் துன்பப்படுகிறார்கள். அத்துடன் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்ட மான், மரை போன்ற காட்டுமிருகங்களுடைய இறைச்சியும் பகிரங்கமாகக் கடைத் தெருவில்வைத்துவிற்கிறார்கள். இங்குள்ள அதிகாரிகள் எவரும் இதுவரை இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை. இனியேனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விஷயமாக அக்கறை காட்டுவது அவசியமாகின்றது.

சி. இராமநாதன்
செட்டிகுளம்.

## கடவுள் வழிபாட்டின் அவசியம்

### கொடிகாமத்தில் பேச்சு

கொடிகாமம, செவ்.

"அஷ்டகிரகங்களின் சேர்க்கையால் மக்களின் மனத்தில் தோன்றுகின்ற பீதி கடவுள் சிந்தனையை உண்டுபண்ணுகின்றது. இந்த சேர்க்கை ஆலயத்திற்குச் செல்லும் பழக்கமில்லாதவரைக்கூட ஆலயம் சென்று வணங்க வைப்பதாயின் அது ஒரு மங்களகரமான சேர்க்கையென்றுதான் கூற வேண்டும். நமக்கு ஏதும் கஷ்டம் தோன்றும்போதுதான் கடவுளைச் சிந்திப்பதும் ஆலயத்திற்குப் போவதுமான ஒரு பழக்கம் நம்மிற் சிலரிடத்தே இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் நேரத்தின் ஒரு பகுதியை கடவுள் வழிபாட்டிற்காக நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்".

இவ்வாறு கொடிகாமம் கட்டைபறித்தான் விக்னேஸ்வரர் கோயிலில் அஷ்டகிரக சேர்க்கையை யொட்டி நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனையின்போது இசைப்புலவர் சி. செல்லத்துரை கூறினர். கூட்டுப்பிரார்த்தனையின் போது கோளறுபதிகப் பாடல்கள் பாடப்பட்டன.

## யாழ்ப்பாண உறு துணையாளர் சங்கம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண உறுதுணையாளர் சங்கத்தின் 120ம் ஆண்டு விழா வருகிற 9ம் திகதி கொண்டாடப்படுமென்றும், இக்கொண்டாட்டத்தின் ஞாபகார்த்தமாக 120 ஆயுள் அங்கத்தினர்களையும், 1200 சாதாரண அங்கத்தினர்களையும் சேர்ப்பதே அதன் குறிக்கோள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இன்றையயாழ்ப்பாண தரும (அரசினர்) வைத்தியசாலையை 14 ஏக்கர் நிலத்தில் முதன் முதலில் ஆரம்பித்து 1907ம் ஆண்டு அரசினரிடம் அதைச் சங்கம் ஒப்படைத்தது.

## ஜனாதிபதி நிக்ருமா இலங்கை விஜயம் செய்வார்?

கொழும்பு, செவ்வாய்

கானா ஜனாதிபதி டாக்டர் நிக்ருமா, விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகவலை இலங்கையிலுள்ள கானா ஹைகமிஷனர் டாக்டர் எஸ். ஜி. அமாகோ தெரிவித்தார். அண்மையில் இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்யவிருக்கும் டாக்டர் நிக்ருமா, இலங்கைக்கும் விஜயம் செய்யலாம் என நம்பப்படுகிறது.

# நித்திரைசெய்யும்போது வீட்டுக்கு தீ மூட்டினராம்

## வழக்கு ஒத்திவைப்பு

கம்பஹா, செவ்வாய்

"நான் வீட்டில் நித்திரை செய்துகொண்டிருந்த சமயம், ஏதோ ஒரு சத்தம் எனக்குக் கேட்டது. வெளியில் சென்று நான் பார்த்தபொழுது, எனது வீட்டுக்கு நெருப்பை வைத்துவிட்டு எட்வின் சிங்கோவும், சிறிபாலாவும் ஓடுவதைக் கண்டேன். வீடு எரியத் தொடங்கியது. பாதுகாப்பாக தலையணி உறை ஒன்றில், நான் ரூ. 1,300 வைத்திருந்தேன். தலையணியும், முழுப் பணமும் எரிந்து சாம்பலாகிவிட்டன!"

வெலிகடுமுல்ல என்ற இடத்தைச் சேர்ந்த எச். மக்லின் நோனா என்பவர், கம்பஹா அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. எஸ். டி. ஜயசுந்தரா முன்னிலையில் மேற்கண்டவாறு கூறினர்.

மக்லின் நோனாவின் வீட்டுக்கு நெருப்பு வைத்ததாக அதே கிராமத்தைச் சேர்ந்த டி. ஏ. எட்வின் சிங்கோ, டி. ஏ. சிரிபாலா ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டு இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

எதிரிகள் இருவரும், தாங்கள் சுற்றவாளிகள் எனக் கூறவே, மாஜிஸ்டிரேட் மேல் விசாரணையை மார்ச் மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# விருந்தளித்தபின் தற்கொலைசெய்தார்

கம்பஹா, செவ்வாய்

அலுத்கம கிராமக் கமிட்டித் தலைவர் திரு. டொன் தோமஸ் றணசிங்கா ஞாயிறன்று காலை கம்பஹா வாடி வீட்டில், துப்பாக்கியொன்றினல் தம்மையே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

மரண விசாரணை நடாத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். டி. சி. விஜயசூரியா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

விசாரணையின்போது, கம்பஹா தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சி. தர்மராஜா தெரிவிக்கையில், சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு தமக்கும், இன்ஸ்பெக்டர் எம். ஐ. புஹாரிக்கும் திரு. றணசிங்கா விருந்தொன்று வைத்தார் என்று கூறினர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "விருந்தின்போது, திரு. றணசிங்கா எங்களிடம் தாம் எந்த நிமிடமும் இறக்கலாம் எனக் கூறினர். இறப்பதற்கு முன்னர், நண்பர்கள் எல்லோரையும் பார்க்க மிக ஆவல் கொண்டிருப்பதாகவும் திரு. றணசிங்கா கூறினர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 9-35 மணியளவில் திரு. றணசிங்கி எனக்கு 'போன்' செய்தார். வாழ்க்கை கசந்துவிட்டதென்றும், அதனல் தாம் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகவும் அவர், போனில் கூறினர். அதைக்கேட்ட நான், முட்டாள்தனமாக தற்கொலை செய்யாதீர்கள் எனக் கூறி, சில புத்திமதிகளையும் எடுத்துரைத்தேன். அதைத் தொடர்ந்து நான் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளை திரு. றணசிங்கா தங்கியிருந்த வாடி வீட்டுக்கு அனுப்பினேன்.

சிறிது நேரத்திற்குப் பின்னர், அந்த கான்ஸ்டபிள் திரும்பிவந்து, திரு. றணசிங்கா ஒரு துப்பாக்கியும் சில தோட்டாக்களும் வைத்திருப்பதாகக் கூறினர். அதைக் கேட்டதும் நான் வாடி வீட்டுக்கு விரைந்து சென்றேன். அங்கு திரு. றணசிங்கி துப்பாக்கியினல் சுட்டு மாண்டு கிடந்தார்."

# செவியை கடித்ததாகவும் பொலிசை தாக்கியதாகவும்வழக்கு

## இருவருக்கு அபராதம்

மாவிட்டபுரம், செவ்வாய்

சங்கானையைச் சேர்ந்த சின்னத்துரை இராசையா, சின்னத்துரை தம்பையா, தம்பையா சின்னத்துரை, திருமதி செல்லமுத்து சின்னத்துரை ஆகிய நால்வரும் சங்கானைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். விஜயரத்தினம் என்பவரைத் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாகவும், சின்னத்துரை தம்பையா என்பவர் திரு. விஜயரத்தினத்தின் காதைத் கடித்து அறுத்ததாகவும் சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கில் சங்கானைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஹெட்டி ஆராச்சி என்பவரைத் தாக்கியதாகவும் நான்கு எதிரிகள் மீது மேலும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

திரு. எஸ். விஜயரத்தினம் சாட்சியமளிக்கையில், தான் சித்தங்கேணியை நோக்கிச் செல்லும் வழியில் முதல் இரு எதிரிகளும் சண்டை பிடித்துக்கொண்டிருந்ததைக் கண்டு அவர்களைச் சண்டையை நிறுத்தும்படி தான் கேட்கவே முதலாவது எதிரி தன்னை ஓர் தடியால் தாக்கியதாகவும் அப்பொழுது இரண்டாவது எதிரி தன்னை கையால் அடித்ததாகவும் கூறினர்.

இரண்டாவது எதிரியைத் தான் அடித்தபின் இரு எதிரிகளையும் ஒரு மரத்துடன் கட்டி வைத்ததாயும் அப்பொழுது இரண்டாவது எதிரியான சின்னத்துரை தம்பையா தனது காதை வாயால் கடித்தார் எனவும் அவ்வேளையில் ஹெட்டி ஆராச்சி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்தாயும் அப்பொழுது அவரும் முதலாவது எதிரியால் தாக்கப்பட்டார் எனவும் கூறினர் நான்காவது எதிரி ஹெட்டி ஆராச்சியை நோக்கி ஒரு கோடரிகொண்டு வெட்டச் செல்கையில் அவர் அப்பெண்ணைத் தனது குண்டாந்தடியால் தாக்கினர் எனவும் கூறினர்.

வழக்கில் முதல் இரு எதிரிகளும் தங்களுக்கு ஏற்பட்ட சடுதியான கோபம் காரணமாக தாங்கள் இக்குற்றத்தைச் செய்தாக ஒப்புக்கொண்டனர்.

நீதிபதி மூன்றும், நான்காம் எதிரிகளை விடுதலை செய்து முதலாம் எதிரியை ரூபா நூறு அபராதம் செலுத்தும்படியும் கோர்ட் கலையும்வரை சிறையில் இருக்கும்படியும், இரண்டாவது எதிரியை ரூபா நூறு அபராதம் செலுத்தும்படியும் உத்தரவிட்டார்.

## உங்கள் வாய்ப்புக்கள்

### தமிழ் அகராதி உதவியாளர்

45 வயதுக்குட்பட்ட ஆங்கில உயர்தரபாடசாலைத் தராதரம் பெற்றவர்களிடமிருந்து அரசகரும மொழி இலாகா தமிழ் அகராதி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் இம்மாதம் 17-ந் திகதிக்கு முதல் அரசகரும மொழி இலாகாக் கமிஷனருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

விண்ணப்பம் செய்வதற்கான மாதிரிப் பத்திரமும் மேற்கொண்ட விபரங்களும் பெப்ரவரி 2-ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் தரப்பட்டிருக்கின்றன. (காலிஸ்தானம் 1)

### சைத்திரீகர்கள்

அரசாங்க அல்லது தனியார் துறை அச்சு ஸ்தாபனங்களில் சைத்திரீகர்களாகக் கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களிடமிருந்து அரசகரும மொழி இலாகா சைத்திரீகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோருகின்றது. அரசாங்க நுண்கலைக் கலாசாலை உயர்தரப் பயிற்சிபெற்று அத்துடன் 3 ஆண்டு அனுபவம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் 22 வயதுக்கு மேற்பட்டோராயும் 35 வயதுக்கு உட்பட்டவர்களாயும் இருத்தல்வேண்டும். இம்மாதம் 17-ந் திகதிக்கு முன்னர் அரசகரும மொழி இலாகாக் கமிஷனருக்கு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் பத்திரமும் மேலதிக விபரங்களும் பெப்ரவரி 2-ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் தரப்பட்டுள்ளன. (காலிஸ்தானம்: 2)

### தேசிய ஜவுளி கூட்டு ஸ்தாபனம்

காரியாலயத் தட்டெழுத்து-சுருக்கெழுத்து வேலைகளில் 2 வருட அனுபவம் பெற்றவர்களிடமிருந்து தேசிய ஜவுளிக் கூட்டுஸ்தானத்தில் காலியாகியுள்ள ஸ்தானங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் நிமிடமொன்றுக்கு 35 தட்டெழுத்துச்சொற்களும், 80 சுருக்கெழுத்துச் சொற்களும் சாதிக்கும் திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

ஆங்கில எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்திபெற்று காரியாலய லிகிதர் வேலையில் 2 வருட அனுபவம் உள்ளவர்களிடமிருந்து இதே ஸ்தாபனத்தில் லிகிதர் பதவிக்கான விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன. இப்பதவிக்கான விண்ணப்பங்கள் தேசிய ஜவுளிக் கூட்டுறவு ஸ்தாபனதின் காரியதரிசிக்கு இம்மாதம் 15-ம் திகதிக்குமுன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். மேலதிக விபரங்கள் பெப்ரவரி 2-ம் திகதி வெளியான வர்த்தமானப் பத்திரிகையிலிருந்து பெறப்படலாம்.

### வட்டாரக் காரியாதிகாரிகள்

கரையோரப்பகுதிகளுக்கென 12 காரியாதிகாரிகளையும் கண்டிப்பகுதிக்கென 18 காரியாதிகாரிகளையும் தமிழ்ப் பகுதிகளுக்கென 8 காரியாதிகாரிகளையும் தெரிவுசெய்வதற்கான பரீட்சையொன்று இவ்வாண்டு ஏப்ரல் மாதம்வரையில் நடைபெறுமென பொது சேவைக் கமிஷனின் காரியதரிசி, பெப்ரவரி 2-ம் திகதி அரசாங்க வர்த்தமானப் பத்திரிகைமூலம் தெரிவித்திருக்கிறர். இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்புவோர் இம்மாதம் 20-ம் திகதிக்குள் தமது விண்ணப்பங்களை அதற்கெனப் பெறப்பட்ட பத்திரங்களில் பூர்த்திசெய்து, பொதுசேவைக் கமிஷன் காரியதரிசிக்கு அனுப்பிவைத்தல்வேண்டும். பரீட்சைக்கட்டணமான ரூ. 50 முடிவுதேதிக்குள் செலுத்தப்படவேண்டும்.

# 'எனது உயிர் எண்ணற்ற வாலிபர்களின் உரிமைக் குரலாக ஒலிக்கட்டும்'

## தற்கொலைபுரிந்த இளைஞனின் கடிதம்

முள்ளியவளை, செவ்வாய்

"இன்னமும் நான் உயிரோடு இருந்து எனக்கும் குடும்பத்தினருக்கும் கஷ்டம் கொடுப்பதை விரும்பவில்லை. ஆகவே, எனது வாழ்வுக்கு நானே முடிவு தேடிக் கொள்கிறேன். வேலை கிடைக்காத கஷ்டநிலையே எனது இந்த முடிவுக்குக் காரணமாகும். பிரிந்து போகும் எனது உயிர், என்னைப்போல வேலையின்றிக் கஷ்டப்படும் எண்ணற்ற வாலிபரின் உரிமைக் குரலாக ஒலித்து, அவர்கள் வாழ்வுக்கேனும் விமோசன மளிக்கட்டும்".

நெடுங்கேணியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கந்தவனம் (வயது 23) என்னும் இளைஞரின் மரணவிசாரணை, முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் நடைபெற்ற போது, மேற்கண்டவாறு கூறும் கடிதத்தையும், வேறு பல கடிதங்களையும், முல்லைத்தீவுப் பொலிசார் சமர்ப்பித்தனர்.

காலஞ்சென்றவரினல் எழுதப்பட்ட பிரஸ்தாப கடிதங்கள், வவுனியா எம். பி., வவுனியா தொழில் அதிகாரி, தாயார் முதலியோருக்கு விலாசமிடப்பட்டிருந்தன.

கந்தவனம் இங்குள்ள உறவினர் வீட்டில் தங்கியிருக்கையில் வாந்திபேடுத்து மயங்கி விழுந்ததால், உடனடியாக முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுகையில் மரணமானர்.

காலஞ்சென்றவர், வித்தியானந்தக் கல்லூரியின் பழைய மாணவரெனவும், எஸ். எஸ். ஸி. தேறியதுடன், வவுனியா தொழில்நுட்பப் பயிற்சிப் பாடசாலையில் மேசனுகப் பயிற்சி பெற்றவரென்றும், வேலையில்லாது கஷ்டப்பட்டவரென்றும் மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. செ. தம்பையா, தற்கொலையெனத் தீர்ப்புக் கூறினர்.

# 'சகோதரியை கடத்திச்சென்று சகோதரனை கொலைசெய்தனர்'

## காலஞ்சென்றவரின் தங்கை சாட்சியம்

கம்பஹா, செவ்வாய்

'வீட்டில் எனது பெற்றோர்கள் இல்லாதசமயம் எதிரிகளில் ஒருவர் எனது சகோதரியைக்கடத்திச்சென்றர். அன்று தான் எனது அண்ணனும் கொலைசெய்யபபட்டார்.'

மீட்டிரிகல கொலை வழக்கு கம்பஹா மாஜிஸ்திரேட் திரு. எஸ். எஸ் குலதிலகா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், பி. டி. லீலாவதிஎன்ற சிறுமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் திகதி இரவு, பி. டி. அருனேலிஸ் என்பவர் அவரது தாயாரைக் காப்பாற்ற ஓடிய சமயம், அவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாக, மீட்டிரிகலவைச் சேர்ந்த பி. டி. தியாகிரிஸ், பி. டி சேதிரிஸ, ஈ. டி. சேதிரிஸ், பி. டி. ஆரியதாசா ஆகியோர் மீது குற்றம்சாட்டி இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

விசாரணையின்போது லீலாவதி மேலும்தெரிவித்ததாவது: "சம்பவம் நடைபெற்றதினத்தன்று எனது பெற்றோர் வீட்டில் இருக்கவில்லை. நான் கிணற்றுக்கு அருகில் நின்றசமயம் ஆரியதாசா என்து சகோதரியைக் கடத்திச் சென்றர். அன்றுதான் எனது சகோதரனும் கொலைசெய்யப்பட்டார்.

அன்று மாலை எனது தாயார் வேறு இருவருடன் பொலிஸ் நிலையத்துக்குச்சென்று முறையிட்டார். எனது தந்தை அன்றுமாலை வீட்டுக்குத் திரும்பிவந்த சமயம், தியாகிரிசும், சேதிரிசும் எங்கள் தோட்டத்துக்கு சமீபத்தில் வந்துநின்று, கெட்டவார்த்தைகளால்எனது தந்தையை ஏசினர்கள். எனது மாமா ஒருவர், எதிரிகள் இருவரையும் அங்கிருந்து துரத்தி அனுப்பிவிட்டார்.

அப்பொழுது எனது அம்மாவின் அழுகைக்குரல் எனக்குக்கேட்டது. அருனேலிஸ் கையில் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு அந்த இடத்துக்கு விரைந்துசென்றர். எனது தந்தையும் டார்ச் வெளிச்சத்துடன் அங்கு ஓடினர். சிறிது நேரத்திற்குப் பின்னர், எனது சகோதரனின் சடலத்தைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள்."

மேல்விசாரணை இம்மாதம் 13ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## "கலைஞர் - ரசிகர் தொடர்பு அவசியம்"

—எம். பி.

மட்டக்களப்பு, செவ்வாய்

"கலைஞர்கள், ரசிகர்களோடு நெருங்கிப் பழகினல் தான், மக்களின் ரசிப்புத்தன்மையை உணர்ந்து, அதற்கேற்ப கலை வளர்ச்சியில் ஈடுபட முடியும். கலைவளர்ச்சியில், கலைஞர்களைப் போலவே, ரசிகர்களுக்கும் பெரும் பங்குண்டு. ஆகவே கலைஞர்களுக்கும், ரசிகர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருக்க வேண்டியதவசியம். இத்தொடர்வை ஏற்படுத்தி கலைவளர்ச்சியைப் பெருக்க நாடெங்கிலும் ரசிகர்கள் சங்கம் அவசியம் தேவை."

அகில இலங்கை ரசிகர்கள் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் அங்குரார்பணக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட, மட்டக்களப்பு எம். பி. திரு செ. இராசதுரை மேற்கண்டவாறு கூறினர். திரு ம. த. லோறன்ஸ தலைமையில் பிரஸ்தாப கூட்டம் நடைபெற்றது.

### நிர்வாகசபை

இலங்கை ரசிகர்கள் சங்க மட்டக்களப்புக் கிளை நிர்வாக சபையினராகப பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ம. த. லோறன்ஸ, உபதலைவர்கள்: திரு. என். அருளானந்தம், திரு. கே. வி. இராசரத்தினம், செயலாளர்: மாஸ்டர் சிவலிங்கம், உபசெயலாளர்: திரு. தில்லை மகாலிங்கம், பொருளாளர்: திரு. சி. பெர்னண்டோ.

# மங்கையர் உலகம்



## ஆசியாவுக்கு விஜயம் செய்யும் திருமதி கென்னடி

அடுத்த மாதம் இந்தியா போன்ற ஆசிய நாடுகளுககு திருமதி கென்னடி விஜயம் செய்கிறார். அவரது வருகையையொட்டி அவருடன் நெருங்கிப் பழகிய பிரபல பத்திரிகையாளர் ஜாக்குவஸலோ எழுதிய கட்டுரை இங்கு தரப்பட்டுள்ளது.

அமெரிக்க வரலாற்றில் குறைந்த வயதுடைய மூன்றாவது தலைமைப் பெண்மணி திருமதி கென்னடி. குடியரசுத் தலைவர் மாளிகையின் வாழ்க்கை முறையை முற்றும் மாற்றப்போகிறவர் இவர். மாளிகையில் சின்னஞ்சிறு குழந்தைகளும், இளம் சிறார்களும், குழந்தை வளர்ப்பு இடங்களும் இருக்கும். மாளிகை முழுவதும் மகிழ்ச்சி ததும்பும் சூழ்நிலை நிலவும். புதிய அலங்காரங்கள் செய்யப்படும்; கலைப் பொருள்கள் கொண்டுவரப் படும். திருமதி கென்னடி ஊக்கம் நிறைந்தவர். வாழ்க்கையில் மிக்க ஆர்வம் உள்ளவர். அவரது கவர்ச்சியின் இரகசியம் இதுவே. அவரது இந்த இயல்பு மாளிகை முழுவதற்கும் புத்துயிரூட்டும்.

### அழகும் அறிவும்

புகைப்படம் பிடிப்பவன் என்ற நிலையில் சென்ற மூன்றாண்டுகளாக நாட்டின் தலைமைப் பெண்மணியை நன்கு அறிந்து கொள்ளும் பேறு பெற்றேன். வாஷிங்டனிலும், ஹயானிஸ்போர்டிலும் நான் அவரைப் பலமுறை படம் எடுத்திருக்கிறேன். ஆரம்பத் தேர்தல் பிரசாரத்திலும் குடியரசுத் தலைவர் தேர்தல் பிரசாரத்திலும் நாட்டின் பல பகுதிகளிலும் நான் அவரோடு பிரயாணம் செய்திருக்கிறேன். அவருடைய கணவரோடும், குடும்பத்தோடும், நண்பரோடும், உறவினரோடும், அரசியல்வாதிகளோடும், பொது மக்களோடும் நான் அவரைப் பார்த்திருக்கிறேன். இவ்வாறு மூன்று ஆண்டுகள் நேரே அறிந்துள்ளதால், அழகும் அறிவும் படைத்த ஜாக்குலின் கென்னடியிடம் நான் பெரும் மதிப்புக்கொண்டேன்.

திருமதி கென்னடி கர்வம் இல்லாதவர்; ஆயினும் தம்மை யறிந்தவர். தமது தேவையும், விருப்பமும், தாம் யார் என்பதும் அவருக்குத் தெரியும். வாழ்க்கையின் பல துறைகளையும் சேர்ந்த மக்களிடம் ஆர்வ பரிவும் அன்பும் எப்போதும் காட்டிவந்துள்ளார். அவர் உடையிலும் அவர் நடந்து கொள்ளும் முறையிலும் ஒரு தனித்தன்மையைக் காணலாம் அச்சமின்றிச் சுதந்திரமாக அவர் நடந்து கொள்கிறார்; அவரது உரையாடல் உள்ளம் தொடும்; பல்வகைப் பொருள்கள் பற்றி அவர் பேசுவார்.

குடும்பத்தைப்பற்றி அவருக்கு மிகவும் அக்கறைஉண்டு. அதற்கு அடுத்தபடியாக உள்ளது அவரது கலை ஆர்வம். புத்தகங்கள் படிப்பதில் அவர் விருப்பம் மிக்கவர். பழங்கால இலக்கியங்களும் படிக்கிறார்.

ஜாக்கெராலாக்போன்ற இன்றைய அமெரிக்க எழுத்தாளர் நூல்களையும் அவர் படிக்கிறார். இன்னிசை கேட்பது அவருக்கு மிகவும் விருப்பம். பழங்கால இன்னிசை கேட்டும் அவர் மகிழ்கின்றார். இன்றுபொது மக்கள் விரும்பும் பாடல்கள் பலவும் அவருக்குப் பிடிக்கும்.

### கலைகளில் ஆர்வம்

ஓவியம் அவரது இன்பப் பொழுது போக்கு. அவரே வர்ண ஓவியந் தீட்டுகின்றார். ஓவியங்களைத் தொகுத்து வைப்பதும் அவரது வழக்கம் அமெரிக்காவிலும், வெளிநாடுகளிலும் கிடைக்கும் சிறந்த ஓவியங்களை விலைக்குவாங்கி, திருமதி கென்னடி தொகுத்து வைத்திருக்கிறார்.

அவர் வரைந்தவோவியங்களில் வியக்கத்தகுந்த புதுமையைக் காணலாம். பழமையைத் தழுவி அவர் புதுமையைப் படைக்கிறார். ஆரவாரம் சிறிதும் இல்லாத முறையில் அவர் ஓவியம் வரைகிறார். அவரது முறை என்னைப் பெரிதும் கவர்ந்தது. ஓவியம் வரைவதற்காகத் தனி அறை ஒன்றுமில்லை வர்ண ஓவியந் தீட்டும்போது, அதற்குரியசிறப்பான உடை ஒன்றும் அணிவதில்லை. செலவு அதிகம் இல்லாதமுறையில் சாதாரண மரச் சட்டத்தில் திரைச் சீலை வைத்து அவர் படம் வரைகிறார்.

புகைப்படம் பிடிப்பதிலும் திருமதி கென்னடி அதேமுறையைத்தான் கையாளுகிறார். புகைப்படக்கலையில் அவர் வல்லவர். (திருமணத்துக்கு முன் வாஷிங்டன் பத்திரிகை ஒன்றிற்குப் புகைப்படம் எடுப்பவராகவும் அவர் பணியாற்றியிருக்கிறார்) புகைப்படம் பிடிப்பதற்குச் சாதாரண புகைப்படக் கருவியையே அவர் பயன்படுத்துகிறார். புகைப்படக் கலை ஒரு படைப்புக் கலையென்று அவர் அதைப்பாராட்டுகிறார். பொது வாழ்க்கையிலுள்ள சிலர் புகைப்படக் கலை தவிர்க்கமுடியாத ஒரு தொல்லையென்று கருதுவதுபோல அவர் நினைப்பதில்லை.

பலநாட்டு மக்களிடமும் அவர் அன்புள்ளவர். 1960-ம் ஆண்டுவெய்யில்காலத்தில் ஹயானிஸ் போர்டில் கென்னடியின் இல்லத்தில் நான் இருந்தேன். காலை உணவு அருந்த திருமதி கென்னடி மாடியினின்றும் கீழே வந்தார். வீட்டிலும், தோட்டத்திலும் மாடியிலும் சுமார் நூறு பேர் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தனர். வீட்டிலுள்ள தொலைபேசிகள் மூன்றிலும் உக்ரேனிய, போலிஷ், செர்பிய மொழிகளில் மக்கள் பேசிக்கொண்டிருந்தனர். சிறுபான்மையினர் நலம்பற்றிய குழுக்கூட்டம்ஒன்றில் கென்னடி இருந்தார். திருமதி கென்னடி புன்னகை தவழ, சமையல்கூடம் சென்று காலை உணவு அருந்ினர். கூடத்தைச் சிறிதும் இடைஞ்சலாக அவர் கருதவில்லை

திருமதி கென்னடி எளிமையாக இருப்பவர். இயற்கையாகநடந்துகொள்பவர். அவர் கணவரும், குடும்பமும், சகோதரியும் குடியரசுத் தலைவரின் சகோதர, சகோதரிகளும் அப்படித்தான். அந்த இயல்பை திருமதி கென்னடி குடும்ப வாழ்க்கையிலும், உடைகளிலும், வீட்டு அலங்கரிப்பிலும் காணலாம்.

திருமதி கென்னடிக்கு உடைகள் ஏராளமாக இல்லை. நெடுங்காலமாக அவர் தம் உடைகளைப் பத்திரமாக வைத்து அணிகிறார். ஓராண்டுக்குமுன் நான் புகைபபடம் எடுத்த போது, அவர் உடுத்திருந்த உடையை அவர் இப்பொழுதும் அணிந்திருக்கக் கண்டேன்.

அக்காலத்தில் அவர் செனட்டரின் மனைவியாக இருந்தாலும் வீட்டில் ஆரவாரமின்றி எளிமையாக இருப்பது அவரது இயல்பு.

### எளிமையில் சிறப்பு

வாஷிங்டனில் ஜார்ஜ் டவுண் பகுதியில் கென்னடியின் குடும்ப இல்லம் இருக்கிறது. அது ஒரு சிவப்புச் செங்கல் கட்டிடம். அது வசதியான வீடு. பகட்டானது அல்ல. சாதாரணமான சாமான்கள் உள்ள வீடு அது எனினும் அழகு மிக்கது. கலைநூல்கள் ஒவ்வொரு மேசையிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். பூக்கள் வீட்டுக்கு அழகுசெய்யும். பூச்செடிகள் வளர்த்தல், பூப்பறித்தல், அவற்றை அடுக்கி வைத்தல் ஆகியவற்றை அழகுறச் செய்வது திருமதி கென்னடியின் வழக்கம்.

தோட்டத்துக்கு [illegible] திருமதி கென்னடி போகும்போது மூன்று வயதான குழந்தை கரோலின் தன் தாயாரோடு கூடப்போவதுண்டு. மற்ற இடங்களுக்குத் தாய் போகும் போது மகளும் போவாள். தாயும் மகளும் நெடுநேரம் ஒன்றாகவே இருப்பார்கள். அவர்கள் இருவரும் உலாவச் செல்வார்கள். பூக்களைப்பறிப்பார்கள். கடற்கரைக்குச் செல்வார்கள். ஒன்றாகச் சேர்ந்து படிப்பார்கள். கரோலின் ஏதாவது குழந்தைப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு போவாள். பூக்களையும் மிருகங்களையும் நட்சத்திரங்களையும் உலகத்தையும் பற்றிய புத்தகங்களைப் பெரும்பாலும் கரோலின் எடுத்துக்கொண்டு போவாள். படப்புத்தகத்தைப் பார்க்கும்போது திருமதிகென்னடி குழந்தையை மடியில் வைத்துக்கொள்வார்.

குழந்தையோடுஇருக்கவிரும்புவதால் திருமதி கென்னடி பல பொது நிகழ்ச்சிகளுக்குப் போகமுடியாமல் போகிறது. அன்பும், ஒழுங்கு நெறியுமே குழந்தை வளர்க்கும் தத்துவம் என்று திருமதி கென்னடி சொல்லுகிறார்.

திருமதி கென்னடி தாம் ஓர் அரசியல்வாதி என்று கருதுவதில்லை. தாம் ஒரு மனைவியென்றும், தாய் என்றுமே தம்மைப பற்றி நினைக்கிறார்.

திருமதி கென்னடி நாட்டின் தலைமைப்பெண்மணி. குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வருவோரை உபசரிக்கும் பெருமாட்டியும் அவரே. எனினும் அவர் தம் கணவரையும் குழந்தைகளையும் கவனிபபவராகவும் பொறுப்புமிக்ககடமையை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சி காணபவராகவும் நன்முறையில் குடும்பத்தை நடத்துபவராகவும் விளங்குகிறார்.


## 'ஈழநாடு' இஸ்ரேல் அனுபந்தம்

★ 11-2-62-ல் வெளியாகும்

ஈழநாடு இதழுடன்

இஸ்ரேல் அனுபந்தமும் இணைக்கப்படும்

வளர்ந்தரத்தில் வளம் பெற்று வளர்ந்து வரும் இஸ்ரேலைப்பற்றியவிபரமான கட்டுரைகளையும் அழகிய படங்களையும் தாங்கி இந்த அனுபந்தம் வெளியாகின்றது.

பக்கங்கள் 16 : தனிப்பிரதி சதம் 15


## நாகரீகப்போர்வையில்...6

அன்புள்ள மாலதிக்கு

உன் கடிதம் கிடைத்தது. முன்னோரின் வாழ்க்கையைப் பற்றி பல கேள்விகள் கேட்டிருக்கிறாய். முன்னோரின் வாழ்க்கையைக் கண்மூடித்தனமாக பின்பற்றி நடக்க வேண்டுமென்று நான் எப்போதும் சொல்லமாட்டேன். காலம் மாறிவிட்டது; கால மாறுதலுக்கு ஏற்பச் சூழ்நிலையும் வாழ்க்கையும் மாறி அமைந்துள்ளன.

விஞ்ஞான வளர்ச்சியால் உலகம் ஒரு குடும்பமாகிவிட்டது. உலகத் தொல்லைகள் குடும்பத் தொல்லைபோல் ஆகிவிட்டன. அதனால் சமுதாய, பொருளாதார, அரசியல் துறைகளில் சீர்திருத்தம் தேவையாக உள்ளது. ஆனால் தனி வாழ்க்கையில் விஞ்ஞானம் பெரிய மாறுதல் ஒன்றும் செய்யவில்லை. மனம் பழைய படியே உள்ளது. குணங்கள் குற்றங்கள் உள்ளபடியே உள்ளன. முன்னோர்கள் தனி வாழ்க்கையில் சிறந்த வழியைக் கண்டு தெளிந்தவர்கள். ஆனால் பொது வாழ்க்கையில் அவ்வாறு தெளிவுபெறவில்லை

இவ்வாறு பகுத்தறியாமல் கண்மூடித்தன்மையோடு இருவகையிலும் புதுமையை நாடிப் பழமையை வெறுத்து வாழ்ந்தால், அது பல தொல்லைகளுக்கு இடந்தரும்.

மனம் கிணற்றுத் தவளை போல் தாழ்ந்து போகாது வானம்பாடியாய் உயர்வதற்குப் பரந்த உலகப் பழக்கம் எம்மிடையே உண்டாகவேண்டும். ஆனால் அந்த பரந்த உலகத்தை வீட்டினுள் வருவித்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. அனுபவிக்கும் இன்ப துன்பம் எதையும் உலகத்தோடு, உலகப் படைப்போடு எண்ணி ஒப்பிட்டுப்பார். அப்போதுதான் கண்ணகி முதல் கஸ்தூரிபாய் வரையில், மணிமேகலை முதல் மாண்டிசோரி வரையில் உள்ள பெண்மணிகளின் பெருமை விளங்கும்.

இப்பெண்மணிகள் எல்லோரிலும் தன்னிலைமை மாறாத தனித்தன்மையொன்று நிலவியதை வரலாறுகள் சொல்லும். அதுவே அவர்கள் மேலோங்கவும் செய்தது. வந்தவர்க்கெல்லாம் வாழ்வளிக்கலாம்; பிறநாட்டுக் கலைகளைப் பயிலலாம்; நாகரிகத்தைப் பின்பற்றலாம்; இவற்றால் பழுதொன்றும் இல்லை. ஆனால் உலகத்தில் உயர்ந்ததாகக் கருதப்படும் எமது நாகரிகத்தை அவை சிதைக்கக் கூடாது. பதிலுக்கு வலுவூட்டுமானால் நம் நாகரிகத்தோடு காலத்திற்கேற்றவாறு பிற நாகரிகம் சங்கமமாகச் செய்ய வேண்டும். இதைத்தான் நாம் எமது பண்டைய பெண்மணிகளிடம் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த வகையில் அவர்கள் வாழ்க்கை இக்காலப் போக்குக்கு ஓர் எடுத்துக் காட்டு.

இந்த அடிப்படை நமது நாட்டுப் பெண் மக்களிடம் கிளர்ந்தெழுமானால் தேசியமும் நாட்டுப்பற்றும் தானகவே எம்மிடம் தோன்றக்காணலாம். சென்ற கடிதத்தில் இதுபற்றி குறிப்பிட்டிருந்தேன். பெண்களிடம் தன்னிலைமை மாறாத சுதேசியப் போக்கு ஒன்று அரும்பி வருவதைப் பார்க்க முடிகிறது. சுதந்திரமடைந்த எந்தநாட்டிலும் இந்நிலைமை வருவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. நீயும் நானும் மாத்திரமல்ல மாந்தரினம் முழுமையும் இதனை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்பது நம்பிக்கை.

இன்றைய காலப்போக்குக்கு ஏற்றவாறும் ஆனால் தமிழகத்தின் தனித்தன்மை மாறாமலும் சுதேசிய உடையை அழகாகப் பல இளம் பெண்கள் உடுத்திக் கொள்ள ஆரம்பித்திருப்பதைப் பார்ப்பதே ஓர் தனி அழகாகும். இது போலவே பல வகையிலும் பெண்களிடம் இத்தன்மை வலுவுற்றுவருகின்றது. மந்தைப் போக்கு இதில் கலந்திருக்கவில்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் பழக்கத்தின் பயனைக் காலப்போக்கில் இது அவர்களின் குறிக்கோளாக மாறுமென்றே கருதுகிறேன். வருங்காலச் சந்ததிக்கு இவர்களின் வாழ்க்கை நல்ல அடித்தளமாக அமையுமென்று நம்புகிறேன். இவற்றுக்கெல்லாம் பெண்கள் உலகப் பெரியார்கள் வரலாறுகளையும் நாட்டு வரலாறுகளையும் குடும்பக் கலையோடு தெரிந்திருப்பது நல்லது. இதுபற்றி எனது சிநேகிதி 'பாக்கி' என்ன சொல்லுகிறாள்? விபரமாக எழுதவும்.

உனது அன்புள்ள

கிருஷ்ணவேணி

## தமிழ்ப் பேரவை புதிய நிர்வாகிகள்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பு மத்திய கல்லூரிதமிழ்ப் பேரவையின் புதிய நிர்வாக சபையினராகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. எஸ். பொன்னுத்துரை. தலைவர்: திரு. வி. கந்தசாமி, உபதலைவர்: திரு. எஸ். விவேகானந்தன், செயலாளர்: ஜவபர் உசைன், உபசெயலாளர்: வில்சன் தாசன்.

## வவனியா பட்டினசபை கூட்டம்

வவனியா, செவ்வாய்

வவனியா பட்டினசபையின் கூட்டம் சபைத் தலைவர் திரு எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அங்கத்தவர் எல்லோரும் சமூகமளித்தனர். தலைவர் தமது உரையில் புதிய அங்கத்தவர்களை, வரவேற்று எல்லோரையும் தம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் பிரதானமான தீர்மானமாக கடைகளின் தற்போதைய வரியை மீண்டும் கூட்டுவதென்று தீர்மானிக்கப் பட்டது.

## கைப்பந்தாட்டம்

பளை, செவ்வாய்

பளை இளைஞர் கைப்பந்தாட்டக் கழகத்திற்கும் செம்பியன் பற்று இளைஞர் கைபந்தாட்டக் கழகத்திற்கும் சிநேகிதபூர்வமான விளையாட்டுப்போட்டி செம்பியன் பற்றில் நடைபெற்றது. இதில் பளை இளைஞர் கழகம் 2-1 கோல்களால் வெற்றியீட்டியது

## இளம்பிள்ளைவாதநோய் தடுப்பு மருந்து

கொழும்பு, திங்கள்

'போலியோ' எனப்படும் இளம்பிள்ளை வாதநோய் இப்பொழுது உலகெங்கும் பரவி வருகிறது. குழந்தைகளிடையே இந்த நோய் பரவி வருவதைத் தடுப்பதற்கு இப்பொழுது புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

பிள்ளைகளுக்கான இனிப்புத் தின்பண்டங்களிலே இந்நோய் தடுப்பு மருந்தைச் சேர்த்துச் செய்வதற்கான முறையொன்றை உலக சுகாதார ஸ்தாபனம் சிபார்சு செய்துள்ளது. தனது 99 அங்கத்துவ நாடுகளுக்குஸ்தாபனம் தனது யோசனையைத் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் மேற் கூறப்பட்ட முறை பரீட்சித்துப் பார்க்கப்பட்டதைத் தொடர்ந்தே உலக சுகாதார ஸ்தாபனமும் அம்முறையை சிபார்சு செய்துள்ளது. ரஷ்யாவில் இந்நோய் தடுப்பு மருந்து தின்பண்டங்களின் மூலமாக 70,000 பிள்ளைகளுக்குச் செலுத்தப்பட்டது.

உள்நாட்டில் இளம் பிள்ளை வாத நோய் பரவுவதைத் தடுப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து புதிய முறை பற்றிய விவரங்களை சுகாதார இலாகா அறிந்துகொள்ளவிருக்கிறது என சுகாதார அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

---

## திரு. தொண்டமான் புகார்

நம்பொட, செவ்வாய்

தமிழில் எழுதப்பட்ட தந்திகள், மணிஓடர்கள், வானொலி லைசென்ஸ் விண்ணப்பங்கள் முதலியவற்றை, நுவரேலியா மாவட்டத்திலுள்ள குறிப்பிட்ட ஒரு தபாற்கந்தோர் ஏற்க மறுப்பதை திரு. எஸ். தொண்டமான் எம். பி. கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

# மட்டக்களப்பில் மகாத்மா காந்தி சிலை
## சிவாஜி கணேசன்திறந்துவைப்பார்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் சுமார் ஐயாயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட காந்தி சிலையொன்று, மட்டுநகரின் மத்தியில் மிக விரைவில் நிறுவப்படவிருக்கிறது.

தென்னகத்தின் சிறந்த நடிகரான, நடிகர்திலகம் சிவாஜி கணேசன் இந்த காந்திஜி சிலையின் திறப்புவிழாவில் கலந்து, சிலையைத் திறந்துவைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மட்டக்களப்பு காந்தி சேவாசங்கத்தின் தலைவரும், மட்டுநகர் முதல் எம். பி. யுமான திரு. செ. இராஜதுரை, காந்திசிலைத் திறப்புவிழாவில் கலந்து, சிலையைத் திறந்து வைக்கவேண்டுமென்று சிவாஜி கணேசனுக்கு அழைப்பு விடுத்துள்ளார். கலைஞர் சிவாஜி கணேசன் மட்டக்களப்புக்கு வருவதற்குக் கிடைக்கும் ஓர் வசதியான தினத்தில் காந்தி சிலை மட்டுநகரின் மத்தியில் நிறுவபபடும். அனேகமாக சித்திரை மாத மத்தியில் இவ்வைபவம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் நரசிங்க புரத்தைச் சேர்ந்தவரும் தற்போது இலங்கையிலுள்ள கலைக் கல்லூரி சிற்பக்கலைப்பகுதியின் பேராசிரியருமான திரு. எம். என. மணி இந்தக் காந்தி சிலையை உருவாக்கியுள்ளார். ஆறு அடி இரண்டு அங்குலம் நீளமானதும், 5000 ரூபாய் பெறுமதியானதுமான இந்தக் காந்திசிலை இலங்கையின் வேறெப் பாகத்திலும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

---

## எருமைப் பேன்

பளை, செவ்வாய்

எருமைப்பேன் என்று சொல்லப்படும் ஒரு வகை பூச்சி இப்பகுதியில் உள்ள புகையிலைச் செய்கை தொழிலைப் பாதித்து வருகிறது. புகயிலைக் கன்றுகளைக் கெடுக்கும் இவ்எருமைப் பேனை ஆரம்பத்திலேயே அழிப்பதற்காக கிருமிநாசினியைப் பாவித்து வருகின்றனர்.

---

## கிணற்றில் குதித்த சிறுமி மீட்கப்பட்டாள்

வேலணை, செவவாய்

வேலணை வடக்கைச் சேர்ந்த சோளாவத்தையில் இரத்தினம் கந்தையா என்பவரின் எட்டு வயதுச்சிறுமி, வட்டில் ஒன்றைக் கிணற்றுள் போட்டுவிட்டு அறியாத்தனமாக எடுக்கக்கிணற்றில் குதித்தார் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, அதிர்ஷ்டவசமாகக்கண்ட அவரின் உறவினர் ஒருவரால் காப்பாற்றப் பட்டார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன் 7-2-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை, 6-55 பாங்கு, 6-45 கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 உருத்திராணி நல்லநாதன்—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 எஸ். வன்னியசிங்கம்—பேச்சு, 9-30 என். சண்முகரத்தினம்-பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 எச். எஸ். மத்வாச்சார்—கோட்டு வாத்தியம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2 10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பேச்சு (சென்னை அஞ்சல்), 7-45 'கடைசி ஆள்'-நாடகம், 8-00 எச். எஸ். மத்வாச்சார்—கோட்டு வாத்தியம் 8-30 திரைப்பட இசை, 9-15 நல்லுரை, 9-20 லயவின்யாசம், 9-30 டெல்லி அஞ்சல், 9-45 இசைமாலை.

## புங்குடுதீவில் நாடகம்

வேலணை, செவ்வாய்

முல்லைநகர் நடன நாடக கலா மன்றத்தினர் அண்மையில் புங்குடுதீவுக்கு விஜயம் செய்தபோது தமது நாடக மன்றத்தின் தயாரிப்பான "கோரமனிதன்" என்னும் நாடகத்தை நடித்துக் காட்டினார்கள்.

---

## குடியேற்ற வாசிகளுக்கு வீடுகள்

முள்ளியவளை, செவ்வாய்

ஆனந்தபுரம் குடியேற்ற வாசிகளுக்கான 50 வீடுகள் சுமார் 1 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் இருக்கின்றன சில வீடுகளில் குடியேற்றவாசிகள் குடியேறி வசித்து வருகின்றனர். பாடசாலை, ஆஸ்பத்திரிக் கட்டட வேலைகளும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

---

## கும்பாபிஷேகம்

முள்ளியவளை, செவ்வாய்

ஆனந்தபுரம் குடியேற்றவாசிகளினல் அமைக்கப்பட்ட பிள்ளையார் கோவிலில், கடந்த செவ்வாய்க்கிழமை கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

தண்ணீரூற்று, ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலில் 3, 4, 5-ந் திகதிகளில் விசேட அபிஷேக பூஜைகளும், அன்னதானமும் நடைபெற்றது.


விலையில் மலிவானது... பாவிக்கச் சிக்கனமானது...




உங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் ஏற்ற பானம்!

வரவுக்குள் செலவைக் கட்டுப்படுத்த வேண்டுமா? அப்படியென்றால் நீங்கள் ஸல்லுக்கு ஆசி கூறுவீர்கள். அது சாதாரண மோல்டட் பால் விதங்களை விட விலையில் அதிகமில்லை. அது பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணத்தை மிச்சமாக்குகிறது! உங்கள் குடும்பத்தார் ஸல்லைப் பருகி பெறும் இன்ப அனுபவத்திற்காக உங்களை வாழ்த்துவார்கள்! வேறெந்த மோல்டட பாலுக்கும் இதைப்போன்ற சுவையில்லை—பாலாடையின் சுவை மிகுந்த பரவச மூட்டும் தித்திப்பு! நீருடன் கலந்து பால்போலப் பருகலாம் அல்லது டீ, கோப்பியுடன், பாலுக்குப் பதிலாகச் சேர்த்துக்கொண்டும், பருகலாம். ஸல் உடன் கரைந்து விடுகிறது!

குடும்பத்தார் உடன் விரும்புவது

ஸல் உடன் கரையும் மோல்டட் பால் — ஹார்லிக்ஸ தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

JWT-HLS-2994

# நியூசிலந்து வீரரின் மூன்று புதிய உலக சாதனைகள்

நியூசிலாந்தைச் சேர்ந்த 23 வயது நிரம்பிய பீற்றர்ஸ்னெல் என்ற விளையாட்டு வீரர் கடந்த இரு வாரகாலத்தில் ஒரு மைல், அரைமைல், 800 மீட்டர் ஆகிய ஓட்டப் பந்தயங்களில் மூன்று புதிய உலக சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

கடந்த 27-1-9622ல் ஒருமைல் தூரத்தை 3 நிமிஷம் 54.4 விநாடிகளில் ஓடி, 1958ல் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஹேப் எலுயற் என்பவர் நிலைநாட்டிய சாதனையை பத்திலொரு விநாடியால் முறியடித்தார்.

ஒருவாரகாலத்துக்குப் பின் கடந்த 3-2-62ல் பீற்றர்ஸ்னெல் அரைமைல் தூரத்தை 1 நிமிஷம் 45.1 விநாடியில் ஓடியும், 800 மீட்டர் (875யார்) 1 நிமிஷம் 44. 3 விநாடியில் ஓடியும் மேலும் இரண்டு புதிய உலக சாதனைகளை ஏற்படுத்தியுள்ளார்.

பழைய அரைமைல் சாதனையாகிய 1 நிமிஷம் 46 8 விநாடி 1957ல் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த தொமஸ கோற்னி என்பவரால் நிலைநாட்டப்பட்டது. பழைய 800 மீட்டர் சாதனையாகிய 1 நிமிஷம் 45 7 விநாடி பெல்ஜியத்தைச் சேர்ந்த ரொகர் மோயன்ஸ என்பவரால் 1955 இல் ஏற்படுத்தப்பட்டது.

1938ல் பிரித்தானியாவைச் சேர்ந்த சிட்னி வூடர்ஸன் ஏற்படுத்திய சாதனைகளுக்குப்பின் பீற்றர் ஸ்னெல் என்பவரே ஒருமைல், அரைமைல் உலக சாதனைகளை ஒரேகாலத்தில் முறியடித்துள்ளார் என்பது குறுப்பிடத்தக்கது.

1964-ல் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் நோக்கத்துடன் தான் தொடர்ந்தும் பயிற்சிசெய்யப் போவதாக திரு. ஸ்னெல் தெரிவித்திருக்கிறார்.

## தீவிபத்தில் 5 கடைகள் நாசம்

கண்டி, செவ்வாய்

நேற்றுக் காலை 3 மணிக்கு பேராதனைச் சந்தியில் ஏற்பட்ட ஒரு தீவிபத்தில் அரைக்கும் ஆலை, பேக்கரி, பாபர் சலூன் உட்பட ஐந்து கடைகள் எரிந்து சாம்பலாயின!

பேராதனைப் பொலிஸார், அண்மையிலுள்ள மண்ணெண்ணை டிப்போவுக்குத் தீயைப் பரவவிடாமல், மிகுந்த சிரமத்துடன் தீயை அணைப்பதில் முற்பட்டனர். அந்த டிப்போவில் சுமார் 1,500 கலன் மண்ணெண்ணை இருந்தது.

சுமார் இரண்டரை மணித்தியாலத்துக்குப் பின்னர் கண்டியிலிருந்து வந்த தீயணைக்கும் படையினரை மக்கள் கண்டிக்கே திருப்பி அனுப்பிவிட்டனர். தீயணைக்கும் படை வருமுன்னர் பொதுமக்கள் பொலிஸாரின் உதவியுடன் மிகுந்த சிரமம் எடுத்து, தீயை அணைத்துவிட்டனர்.

நேற்றுக் காலை 4-25 மணிக்கு, கண்டியிலுள்ள தீயணைக்கும் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டது. ஆனல் தீயணைக்கும் படையினர் காலை 6-30 மணியாகியும் கண்டியிலிருந்து புறப்படவில்லை! கண்டிக்கும் பேராதனைக்குமுள்ள இடைத் தூரம் 4 மைல்தான்!

இதுபற்றி விசாரித்த போது மாநகரசபை எல்லையை விட்டு வெளியில் செல்லவேண்டுமானல் மாநகரசபை மேயரிடமிருந்து அனுமதிபெற வேண்டும் என்றும் அதனல் தான் தாமதம் ஏற்பட்டது என்றும் தெரிய வந்தது.

## புண்ணியகால விசேஷ திருவிழா

மட்டக்களப்பு, செவ்வாய்

மஹோற்சவ புண்ணியகாலத்தை முன்அட்டு, மட்டக்களப்புப் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயங்களில் விசேஷ பூசைகளும் திருவிழாக்களும் நடைபெற்றன. கல்லடி உப்போடை ஸ்ரீ, சித்திவிநாயகர் ஆலயத்தில் அருள்நெறித் திருக்கூட்டத்தாரின் ஆதரவில், ஞாயிற்றுக்கிழமை இரவு விசேஷ பிராத்தனைக் கூட்டம் நடைபெற்றது. பண்டிதர் செ. பூபாலபிள்ளை, சைவப் புலவர் பண்டிதர் எஸ். கிருஷ்ணபிள்ளை ஆகியோர் செற்பொழிவாற்றினர். திங்கட்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு விசேஷ திருவிழா நடைபெற்றது. அதைத் தொடர்ந்து கல்லடி உப்போடை, கல்லடி ஆகிய வீதிகளினூடாக சுவாமி எழுந்தருளிச் சென்று கல்லடி கடற்கரையில் தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

## உடுவில் பகுதியில் திருட்டு

### 8 பேர் கைது

யாழ்ப்பாணம், புதன்

உடுவில் தொகுதியிலுள்ள சங்குவேலிப் பகுதியில் கடந்த இரண்டு மாத காலமாக திடீர் திடீரென பல களவுகள் நடைபெற்றிருக்கின்றன. இப்பகுதியிலுள்ள மூன்று நாலு கிராமங்களில் இத்திருட்டு நடைபெற்றுவந்திருக்கிறது.

தண்ணீர் இறைக்கும் யந்திரம், கேற், கால்நடைகள் ஆகியன பெரும்பாலும் களவாடப்பட்டிருக்கின்றன.

இதுசம்பந்தமாக பொலிசாருக்கு அடிக்கடி புகார்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இதன் காரணமாக சந்தேகத்தின்மீது ஒரு வாடகை கார் சர்ரதி உட்பட 8 பேரை சுன்னுகம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## இளைஞர் கழகம் புகார்

வேலணை, செவ்

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த ஒரு மாத காலமாக பிரதம டாக்டர் எவருமில்லாமையால் அங்கு செல்லும் நோயாளர் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றார்கள். இதுபற்றி புங்குடுதீவு இளைஞர் கழகம் சுகாதார அமைச்சருக்கும் தீவுப்பகுதி எம். பி. யான திரு. வீ. ஏ. கந்தையாவுக்கும் புகார் செய்துள்ளது.

## மரண அறிவித்தல்

திரு. வே. இராமநாதரின் அருமை மனைவியும் திரு. இ. கந்தையா (வர்த்தகர், தட்டா தெரு, யாழ்ப்பாணம்) திரு. இ. செல்வரத்தினம் (ரோயல் கபே, கிளிநொசசி) ஆகியோரின் தாயாரும் திரு. இ. முருகேசுவின் சகோதரியுமான திருமதி இராமநாதர் சின்னத்தங்கம் நேற்று (6-2-62) செவ்வாய்க் கிழமை காலை 11 மணியளவில் சிவபதமெய்தினர். அன்னரின் பூதவுடல் இன்று நண்பகல் 12 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

4, சீனியர் ஒழுங்கை, வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்.

## டெலிவிஷன் துறையில் புது முயற்சி

### ஜப்பானிய ஒலிம்பிக்கை ஐரோப்பாவில் காணலாம்

முனீச், (டாட்) பெப் 6

பவேரியாவின் தலைநகரமான முனிச்சிற்கு அருகாமையிலுள்ள அமர் ஏரிக்குச் சமீபத்தல் மாபெரும் "பிளாஸடிக்பலூன்" கோளங்கள் நான்கு அமைக்கப்பட்டுள்ளன இவை ஒவ்வொன்றும் 110 அடி உயரம். குறுக்களவு 180 அடி. 'ராக்ஷஸ பச்சை முட்டைகள்' என்றழைக்கப்படும் இக் கோளங்களுக்குள் "ரேடியோ டெலஸகோப்" முதலிய கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன செயற்கைக் கோளங்களிலிருந்தும் பெறப்படும் ஒலிகளை இக் கருவி பெற்று பிரதிபலிக்கும் ஆற்றலுள்ளது. இதன்மூலம் ஜப்பான் அல்லது அமெரிக்கா போன்ற தூர தேசநாடுகளில் நடைபெறும் சம்பவங்களை அவை நடைபெறும் போதே ஐரோப்பிய நாடுகளிலுள்ள டெலிவிஷன் திரைகளில் காட்ட முடியும்.

வானவெளியிலிருந்து ஒலி ஒளி அலைகளை கிரஹிப்பதற்காக 70 அடி உயரத்தில் 'ஏரியல்' கட்டப்பட்டுள்ளன.

இப்போதுள்ள திட்டப்படி அமெரிக்க அதிகாரிகள் 1963ம் வருட ஆரம்பத்திற்குள் 20 அஞ்சல் நிலைய செயற்கை கோள்களை வான வெளியில் சுற்றச் செய்வதென திட்டமிட்டு இருக்கின்றனர். இவை பூமிக்கு 5000 முதல் 10,000 வரை கிலோமீடடர் தூரத்தில் அதன் சுவடுகளில் சுற்றிவரும் ஒவ்வொரு செயற்கை கோள்களிலுமிருந்து தொடர்பான முறையில் அலைகளைக் கிரகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால், டெலிவிஷன் காட்சிகள் அடிக்கடி தொடர்பு அற்றுப்போய்விடாது.

இந்த சாதனங்களை அமைத்துள்ளதன் மூலம் ஜெர்மன் தபால் காரியாலயம் செய்தி போக்கு வரத்துத துறையில் மாபெரும் திட்டங்களைப் புகுத்தவிருக்கிறது. டோக்கியோவில் 1964-ல் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுக் காட்சிகளை அவை நடைபெறும் அதே சமயத்தில் ஐரோப்பிய நாடுகளிலுள்ள டெலிவிஷன் 'செட்'களில் காண முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கு ஜெர்மனியில் அமைக்கப்பட்டுள்ள இப்புது சாதனங்கள் மூலம் ஏககாலத்தில் 600 சம்பவங்களைப் பெற்று திரையிட முடியும். அமர் ஏரியுள்ளப் பகுதி இதுவரை ஒரு சுகவாசஸ்தலமாகவே இருந்துவந்தது. இப்போது இந்தராக்ஷஸபச்சை கோள்களைப பார்ப்பதற்கென்றே உல்லாசப் பயனிகள் ஏராளமாக இவ்விடத்திற்கு வர ஆரம்பித்துள்ளனர்.

## தற்கொலை: பெண்கள்தான் அதிகம்

கொழும்பு, செவ்வாய்

இத்தாலி, போர்ச்சுக்கல், வெனிசூலா, இஸ்ரேல், மேற்கு பெர்லின் ஆகிய நாடுகளில் ஆண்களைப்பார்க்கிலும் பெண்கள்தான் அதிகமாகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அதுபோல் இலங்கையிலும் பெண்கள்தான் அதிகமாகத் தற்கொலை செய்து கொள்ளுகிருர்கள் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

தற்கொலை செய்து கொள்பவர்களில் 15க்கும் 19வயதுக்கும் இடையில் உள்ள பெண்கள்தான் அதிகம் என கணக்கெடுத்துள்ளார்கள்

## 'மொழி மாற்றத்தில் அவசரம் கூடாது'

### — திரு. தேஷ்முக்

நாகபுரி, பெப். 6

"ஆங்கில மொழியின் இடத்தில் இந்தி மொழியைக் கொண்டு வருவதில் அவசரம் கூடாது. இவ்வித அவசரப் போக்கு தேசத்தின் முன்னேற்றத்தைப் பாதித்துவிடும்" என சர்வகலாசாலை மான்யக் கமிஷனின் முன்னைநாள் தலைவா திரு. ஸி. டி. தேஷ்முக் அமராவதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் போதனு மொழி' பற்றிப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. தேஷ்முக் தொடர்ந்து பேசியதாவது:

மொழி மாற்ற விஷயத்தில் அவசரமாக நடந்து கொண்டால் சில சர்வகலாசாலைகளில் தீங்கே விளைந்துள்ளது. இந்தியே தேசிய மொழியாக இருந்த போதிலும் போதனு மொழியாக மாற்றம் செய்கையில் மிகவும் ஆறுதலாகவே மாற்றம் செய்ய வேண்டும்.

ஆங்கில மொழியை அகற்றிவிடுவது நாட்டுக்கு மிகவும் நஷ்டத்தையே தரும். விஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் ஆங்கில மொழி அறிவு மிகவும் அவசியம்.

## அஸ்வானில் மார்ஷல் டிட்டோ

கெய்ரோ, பெப். 6

யூகோஸலேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு அஸ்வான் பகுதிக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து மீண்டும் கெய்ரோ திரும்பிய பின் இருவரும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவர்.

## லாவோஸ் நிலைமை

வாஷிங்டன், பெப். 6

வடக்கு லாவோசில் நிலைமை மேலும் மோசமாக இருப்பதாக அமெரிக்கா கருதுவதாக அமெரிக்க ராஜாங்க இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

யாழ்ப்பாணம் மனோகரா மிஸ் குமாரி நடித்த மந்திரவாதி

சாவகச்சேரி தேவேந்திரா ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு தமிழ) பேசும் படம்.


3வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) திவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

பெண்மையின் நிறைவு!

தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!

பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!

இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும் உத்தமியின் காவியம்!

இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

பிரேம் நஸீர் மிஸ் குமாரி நடித்த

மந்திரவாதி

Daily at 4 p.m. only

THE STORY OF RUTH

(This is a Story From the Bible)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.